நாம்

C.N. அண்ணாதுரை, M.A.

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் — திருச்சி

முதற் பதிப்பு: ஏப்ரல் 1951

விலை ரூ. 1—0—0

ரெயின்போ பிரிண்டர்ஸ்,
திருச்சிராப்பள்ளி.

அவர்களுக்கு..........!

தில்லியில், அண்ணு, பேசினுர், ஒரு மாபெரும பொதுக்கூட்டத்தில், 'தம்பி' என் தலைமையில்!

ஆயிரக் கணக்கில், மக்கள் குழுமி யிருந்தனர்—அமைதி அரசோச்சியது — அண்ணுவின் குரல் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது, கணீர் கணீரென!

ஆள்வோரின் 'கோணல்களை', எடுத்துக்காட்டினுல் சீறுகிருர்கள்—' ஆகா, நாங்கள் கதராடைக் காரர்களல்லவா? சுதந்திரம் பெற்ற சுத்த வீரர்களல்லவா? எங்களை யாரும் தட்டிக் கேட்கக் கூடாது—முடியாது' என்று பேசுகின்றனரே, அவர் தம் அர்த்தமற்ற பேச்சுக்கு, தக்க 'பதில்' இந்த சொற்பொழிவு!

நாட்டில், ஒவ்வொரு துறையிலும் உலவும் 'அவர்களுக்கு', உணர்த்துகிருர், நாம் யார் என்று—'நம்மை'ப்பற்றித் திருத்தியும், புகுத்தியும், மாற்றியும், குறைத்தும் சிலர் பேசித் திரிகிறார்களே, அவர்களுக்கு, நாம் நாட்டுக்குச் செய்துவரும் தொண்டினை எடுத்துக் காட்டுகிருர் இந்த நூல் மூலம்!

ஆகவே, தில்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தார், 'தில்லி மக்கள் கேட்டால் மட்டும் போதாது—திராவிடநாடே கேட்டாக வேண்டும்' என்று வற்புறுத்தினர். தோழர் வி. வி. இளஞ்செழியன் பேச்சை அழகாக எழுதித்தந்தார். திராவிடப் பண்ணைத் தோழர் முத்துகிருஷ்ணன், தோழர்களின் விழைவை நிறைவேற்றி வைக்கிருர், இந்த ஏட்டின் மூலம்! அவரின் முயற்சியைப் பாராட்டுவோமாக!

அன்பன்,

காஞ்சி
30—3—51

தில்லி - வில்லாளன்

பண்ணை பேசுகிறது........

தில்லியில் அண்ணு பேசும்பொழுது உடன் இருந்தேன். கேட்டேன். களித்தேன். இப்பேச்சே, இயக்க இலட்சியத்தின் அடிப்படை மூச்சு—ஆகவே இதனை நூலாக்க விழைந்தேன். நான் நினைத்ததைப் போல, கழகத் தோழர்களும் கூறினர். இந்த உரையாடல் முடிவதற்கு முன்னுல் தோழரொருவர் “அண்ணு பேச்சை அப்படியே எடுத்து விட்டேன்” என்றுர்.

அந்த உரையாடலின் அறுவடையே இந்நூல்.

நூலாக்க அனுமதித்த அண்ணுவுக்கும், தில்லி, தி. மு. க. தோழர்களுக்கும், பேச்சை எழுதித் தந்த தோழர் இளஞ்செழியனுக்கும், திருத்தி யுதவிய தோழர்கள் அரங்கண்ணல், தில்லி வில்லாளன் ஆகியோருக்கும் பண்ணையின் சார்பில் அன்பைக் குழைத்து, ஆர்வத்தைச் சேர்த்து வழித்தெடுத்த நன்றியைப் படைக்கிறேன்.

தி. வி. முத்து கிருஷ்ணான்

நாம்

திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த 1½ ஆண்டாக நாட்டிலே பணி புரிந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு உங்களில் பலருக்குத் தெரியும். வரலாற்றுத் தொடர்பில்லாத இன்று நேற்று முளைத்த புதுக்கட்சி அல்ல அது. சென்ற 25 ஆண்டுகளுக்கு முன் சுயமரியாதைக் கழகம் என்னும் அறிவியக்கம் சமுதாயத்தில் படர்ந்திருக்கும் மூட நம்பிக்கைகளை முறியடிக்கவும், பழங் கொள்கைகளைப் போக்கவும், பகுத்தறிவைப் பரப்பவும் உண்டாக்கப்பட்டது. அது அப்பொழுதிருந்த ஜஸ்டிஸ் கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தது. பிறகு ஜஸ்டிஸ் கட்சியையே சுயமரியாதைக் கழகம் எடுத்து நடத்த ஆரம்பித்தது. ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் பெரும் பணக்காரர்கள், பதவி வேட்டை யாடுபவர்கள், பட்டமோகம் பிடித்தவர்கள், படாடோபக்காரர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் துணை போபவர்கள், இலட்சியப்பற்று இல்லாதவர்கள் — இவர்களுடன் சேர்ந்து ஏழைகளுக்கு சேவை செய்வது முடியாத காரியம் என்று நாங்கள் சொன்னோம். சொன்னதற்காக எங்களை யெல்லாம், அன்னக்காவடிகள், அரசியல் தெரியாததுகள், சுயமரியாதைச் சூறாவளிகள் என்று கூறி இவர்களை ஒழித்து விட வேண்டும் என்று ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சல்லடம் கட்டினர்.

அவர்கள் சல்லடத்தை 1943ல் சேலத்தில் நாங்கள் கூடி முறியடித்து அந்தப் பழம் புள்ளிகளை, 'கிழப் புலிகளை' பெரும் தலைவர்கள் எனப் பட்டோரை கட்சியிலிருந்து விரட்டி விட்டு சுயமரியாதைக் கழகத்தை திராவிடர் கழகமாக்கினேம். அதன் பிறகு ஒரு ஆண்டுக்கு முன் தலைவருக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் தனியாகப் பிரிந்தோம். தனிக் கழகம் அமைத்தோம். அதன் பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம்!

திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த $1\frac{1}{2}$ ஆண்டாக 20, 25 ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கம் எந்த சமுதாய சேவையைச் செய்துவந்ததோ அதே சேவையைத் தான் இப்பொழுதும் செய்து வருகிறது. ஆனல் நாங்கள் இப்படி தேவை ஏற்பட்டபோது இலட்சியம் நிறைவேறவேண்டி கழகத்தை திருத்தியும், மாற்றியும், வேறு பெயர் இட்டும் கழகத்தை வளர்த்திருக்கும் விதத்தை காங்கிரஸ் தலைவர்கள் ஊர் ஊராய் போகுமிடமெல்லாம் "இவர்கள் அடிக்கடி அரசியல் உருமாறுபவர்கள், கட்சி மாற்றுபவர்கள்" என்று திரித்துக் கூறுகிறுர்கள். இதை நாங்கள் எப்படி கருதுகிறேம் என்ருல் முதலில் ஓட்டு வீட்டில் இருந்தோம், பிறகு மாடி வீடு கட்டினேம், பிறகு அதற்கு மறுமாடி வைத்தோம், இப்பொழுது மூன்ருவது மாடி கட்டி அந்த மேல்மாடியிலே உலவுகிறேம். அதிலே எங்களுக்கு அளவு கடந்த மனத் திருப்தி. காரணம் கட்சி அவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது—வளர்ந்திருக்கிறது என்ருல் $1\frac{1}{2}$ ஆண்டில் நமது கட்சியை அழித்தால் தான் ஆட்சி செய்ய முடியும் என்று

காங்கிரஸ்காரர்களும், சர்க்காரும் யோசிக்கும் அள வுக்கு வளர்ந்திருக்கிறது!

அவ்வளவு வளர்ச்சியும் பணபலமில்லாமல், பத்திரி கைகள் உதவியில்லாமல், பெரிய மனிதர்கள் தயவில்லா மல், சாதாரண மக்களின் ஆதரவைக்கொண்டு, வாலிபர் களின் துணைகொண்டு, கல்லூரிக் காளைகள் பள்ளி ஆசிரியர்கள், நடுத்தர வகுப்பினர் இவர்கள் காட்டும் ஆர்வத்தைக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது. கழகம் ஆரம்பித்த 1½ ஆண்டிற் குள் தோழர்களின் முயற்சியாலும், நண்பர்களின் ஆதர வின் பயனாலும் இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சுமார் 600 கிளைக் கழகங்கள் தமிழ் நாட்டில் மட்டும் இருக்கின்றன. கோவை போன்ற பெரிய நகரங்களில் மாத்திரமல்ல, ஆனை மலை போன்ற மலைப் பிரதேசங்களில், திருவாங்கூர்—கொச்சி போன்ற கடற்கரை யோரப்பிரதேசங்களில், சித்தூர் பல்லாரி போன்ற வட மாவட்ட பிரதேசங்களில் மலேயா, சிங்கப்பூர், இலங்கை போன்ற கடல் கடந்த பிரதேசங்களில் நமது கழகங்கள் இருக்கின்றன. வாடை யென்றும் கோடை யென்றும் பாராமல் இடைவிடா மல் நாள்தோறும் நமது தோழர்கள் செய்துவந்த பிரச் சாரத்தின் பலனாய் பட்டி தொட்டிகளிலும் இன்று பகுத்தறிவு மணம் வீசுகிறது.

நம்மிடையே நாலு, ஐந்து வாரத் தாள்கள் இருக் கின்றன. ஏதோ நம்மிடமும் ஒரு தினசரி இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிற அளவிலே தான் இருக் கிறது. அவ்வளவுதான்! நம்மிடம் வள்ளல்கள் இல்லை அடிக்கடி பணம் கொடுத்துதவ! பின்னே எப்படி

தேவைக்கு பணம் கிடைக்கிறது என்று கேட்கலாம். நாங்கள் நாடகம் போட்டு நாட்டு மக்கள் காட்டும் ஆர் வத்தின் பயனாக வரும் காசுகளைக்கொண்டு காரியம் ஆற்றுகிறோம். சென்னையில் கழக அலுவல்களைக் கவனிக்கத் தலைமைக் காரியாலயம் ஒன்று கட்டவேண் டும் என்று முயற்சி எடுத்து நாடகங்கள் நடத்தியதில் 25000 ரூபாய் கிடைத்தது. சென்னை நகரத்திற்கு நமக்கென்று ஒரு ஒலிபெருக்கி வேண்டும் என்று ஒரு நாடகம் நடத்தினோம் 3000 ரூபாய் கிடைத்தது. ஒரு பெரிய 'மைக்' வாங்கி வைத்திருக்கிறோம். நமது வழக்குகளை நடத்த வக்கீலுக்குப் பணம் வேண்டும் என்று ஒரு நாடகம் போட்டோம் ரூ. 1500 கிடைத்தது. குன்றத்தூர் வழக்கை நடத்த வக்கில் கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கை எல்லாம் சொல்லுவதேனென்றால் சாதாரண மக்க ளின் துணைகொண்டே கட்சியை நன்றாய் வளர்க்க முடியும் என்பதை வாலிபர்கள் உணரவேண்டும். "அன்னக்காவடிகள்" தரும் ஆதரவு பணக்காரர்கள் தரும் 'செக்கை'விட ஜமீன்தாரர்கள் தரும் பண முடிப்பு களைவிட விலையுயர்ந்தவை, வலுவுடையவை என்பதை வாலிபர்கள் உணரவேண்டும் என்பதற்காக!

திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்திருக்கும் வளர்ச்சியைக் கண்டு மாற்றுக் கட்சிக்காரர்கள் மருட்சி யடைகிறார்கள். ஊர் ஊராய் சுற்றுகிறார்களே, மாநாடு கூட்டுகிறார்களே, திரள் திரளாய் மக்களும் கூடுகிறார் களே, தீர்மானம் போடுகிறார்களே, மக்கள் மனம் மாறி விடுவார்கள் போலிருக்கிறதே என்று காங்கிரஸ்காரர் கள் ஆயாசப்படுகிறார்கள். சர்க்காரைக் கவிழ்க்க சதி

செய்கிறார்கள் இவர்கள், புது தேர்தல் திட்டம் தீட்டு கிறார்கள் இவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். சர்க்கார் நாம் போகுமிடமெல்லாம் ஒற்றர்களை கூடவே அனுப்பி குற்றம் கண்டு பிடிக்கச் சொல்கிறது.

சர்க்கார் மாற்றுக் கட்சியை வரவேற்கவேண்டிய இந்த நேரத்தில் மாற்றுக் கட்சியைக் கண்டு மருட்சி அடைகிறது. இந்த நாட்டு மக்கள் இப்பொழுது சுதந்திர பூமியில் வாழ்கிறார்கள்! இது மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் காலம்—அரச பரம்பரையினர் ஆளும் காலம் மாறி சாதாரண மக்கள் ஆளும் காலம்—பணக்காரர்கள் மட்டும் ஆளும் காலம் அல்ல-பாட்டாளிகளும் பாராளும் காலம்—மதோன்மத்தர்கள் ஆளும் காலத்தில் அல்ல, மக்கள் ஆளும் காலத்தில் நாம் இருக்கிறோம் வெளி நாட்டான் நம்மை ஆளவில்லை. நம் நாட்டாரே நம்மை ஆள்கிறார்கள். இப்பொழுது நடப்பது வெள்ளைக்காரன் சர்க்கார் அல்ல-நம்முடைய சர்க்கார்! சுருக்கமாகச் சொன்னால் நம்மை நாமே ஆள்கிறோம். இதை அரசியல் இலக்கணத்தில் ஜனநாயகம் அல்லது குடி அரசு என்பார்கள்.

நாம் அடிமை ஆட்சி அழிந்துபோய் குடியரசு ஆட்சி நடக்கும் உன்னத சகாப்தத்தில் வாழ்கிறோம். அதாவது இந்திய உபகண்டத்திலிருந்து வெள்ளைக்காரர்கள் விரட்டப்பட்டு யூனியன் ஜாக் பறந்த இடத்தில் 'நமது கொடி' பறக்கிறது—நமது நாட்டு தூதுவர்கள் உலகத்தின் பல பாகங்களிலும் உலவுகிறார்கள்-பாரிசில் நமது தூதுவர்கள் உண்டு—அமெரிக்காவில் நியூயார்க்கிலே நமது தூதுவர்கள் வலம் வருகிறார்கள்-

ஜெர்மனியிலே இருக்கிறார்கள்—இத்தாலியிலே காண்கிறோம்—மாஸ்கோவிலே பார்க்கிறோம், சீனாவிலே, இந்தோனேஷியாவிலே உலவுகிறார்கள்! அகில உலகிலும் பரிபாலனம் செய்யப்படும் நாடுகளின் பெரு நகரங்களிலெல்லாம் நமது தூதுவர்கள் உலவுகிறார்கள். இது மிக மிக உயர்ந்த நிலை. நாம் ஒரு நாட்டு மக்கள் இருக்க வேண்டிய பொற்காலத்தில் இருக்கிறோம் என்று பொருள்.

ஜனநாயக ஆட்சி நடக்கும் இந்த நேரத்தில் தான், ஆட்சி சரியாக நடக்கிறதா, தப்பாக நடக்கிறதா என்று பார்க்கும பொறுப்பும், தப்பாக நடந்தால் தவறை எடுத்துக்காட்டும் கடமையும் மக்களுக்கு அதிகமாகிறது. மாற்றுக் கட்சி இருக்கவேண்டியது மிக மிக அவசியமாகிறது.

மோட்டார் நன்றாக ஓட அதை ஓட்ட விசை இருந்தால் மாத்திரம் போதாது—அது தவறான வழியில் சென்றால் தடுக்க 'பிரேக்கும்' வேண்டும்! நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மாத்திரம் போதாது - அதிலிருந்து வெள்ளம் புரண்டு ஊரை அழித்துவிடாமல் இருக்க கரை வேண்டும்! நல்ல காளையை ஓட்ட சிறு சவுக்கு இருந்தால் மாத்திரம் போதாது—அதை கிழக்கேயும், மேற்கேயும் திருப்ப மூக்கணாங்கயிறும் வேண்டும்! வீட்டிற்கு வாயிற்படி இருந்தால் மாத்திரம் போதாது—வாயிற்படிக்கு கதவு வேண்டும், கதவுக்கு தாழ்ப்பாளும் வேண்டும்! அது போலவே ஜனநாயக காலத்தில்—குடியரசு வந்த பிறகு—நாட்டில் நல்லாட்சி நடக்கவேண்டுமானால் ஆளும் கட்சி ஒன்று இருந்தால் மாத்திரம் போதாது, மாற்றுக் கட்சியும் இருக்க

வேண்டும். மாற்றுக் கட்சி இல்லாத ஜனநாயக சர்க்கார், பிரேக் இல்லாத கார், கரை இல்லாத ஆறு, மூக்கணாங்கயிறு இல்லாத மாடு! ஆகவே ஆளும் கட்சிக்கு அது அடக்குவாரற்று அக்கிரமம் செய்யும் கட்சியாக மாறாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள ஒரு மாற்றுக் கட்சி தேவை. ஜனநாயக காலத்தில் ஆளும் கட்சி மாத்திரம் இருந்தால் அது ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் தனது கட்சித் தோழர்களைப் பாராட்டவும், அத்தோழர்கள் ஆட்சி யில் குறை ஏற்பட்டால் அக்குறையை மறைக்கவும் பயன்படுமே தவிற மக்களின் குறையை சர்க்காருக்கு எடுத்துக்கூறி அதைப் போக்கப்பயன்படாது. மாற்றுக் கட்சி இருந்தால் தான் அது, ஆட்சியும், ஆட்சி செய்யும் கட்சியும், அநீதி இழைக்கும் பொழுது அதைக் கண்டிக் கவும், அப்படிக் கண்டிக்க மக்கள் அச்சத்தாலோ, அறி வின்மையாலோ மறந்திருந்தாலும் அவர்களை கண்டிக் கும்படி தூண்டவும் பயன்படும். இப்படி ஜனநாயக காலத்தில் சர்க்காரின் காரியங்களை கவனிப்பது மக்க ளுக்கு இருக்கும் மகத்தான பொறுப்பாகும்! குறைகள் இருந்தால் கண்டிக்கவும் தேவையிருந்தால் சர்க்கா ரையே மாற்றியமைக்கவும் உரிமை உண்டு. மக்களுக்கு, என்பதை உணர்த்தும் மாற்றுக் கட்சி செய்யவேண்டிய மகத்தான பணியை திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வருகிறது.

நாட்டை ஆள்பவர்கள் தேசிய வாதிகளல்லவா? உண்மை கதர் கட்டுபவர்களல்லவா? மறுக்கவில்லை ராட்டை சுற்றியவர்களல்லவா? சந்தேகிக்கவில்லை! தடியடி பட்டவர்கள் - வருத்தப்படுகிறோம்! சிறை

சென்றவர்கள்—பாராட்டுகிறோம் அதற்காக, சிலர் கள் நீங்கள் தீயதே செய்ய மாட்டீர்கள் என்று நாங்கள் நம்ப வேண்டுமா? எப்படி நம்புவது? ஏன் நம்பவேண்டும்?

நல்லது செய்தீர்கள் பாராட்டுகிறோம். கெட்டது செய்தீர்கள் - வருத்தப்பட்டோம்; திருத்த முயற்சித்தோம். கதர் கட்டியவர்கள் இவர்கள்; இவர்கள் செய்வதெல்லாம் நல்லவையாகவே இருக்கும் என்று சொன்னால் நம்ப மாட்டோம். காவி உடுத்தியவர்களையே நம்பாதவர்கள் நாங்கள். ஏன்? காவியுடுத்தியவர்கள் காமுகரானதைக் கண்டிருக்கிறோம். கமண்டலம் ஏந்தியவர்கள் காதகராகி விட்டதைப் பார்த்திருக்கிறோம். மடாலயங்களிலே மடாதிபதிகள் சுத்த ஞானத்தைத் தேடுவதற்குப் பதிலாக "ஞானம்" என்ற பெயருடைய பெண்ணைத்தேடி அலைவதைப் பார்த்திருக்கிறோம். இப்படி காவியுடுத்தியவர்களையே சந்தேகிக்கிறவர்கள் நாங்கள். கதர் கட்டியவர்களை சந்தேகிக்காமலா விடுவோம்! ஆலயங்களிலே உள்ள காவியணிந்தவர்களைக் கண்டிக்கும் பொழுது, ஆட்சியிலே உள்ள கதருடுத்திய காங்கிரஸ் காரர்களைக் கண்டிக்கக் கட்டாயம் எங்களுக்கு உரிமையுண்டு. சர்க்காரைச் சந்தேகிக்கவும் கண்டிக்கவும் மக்களுக்கு உரிமை இருக்கிறது. இதை மக்கள் உணரவேண்டும். நாம் காவியுடுத்தியவர்கள் போக்கை நன்றாக கவனிக்க வேண்டும். காவி யுடுத்தியிருப்பார்கள் - மார்பிலே உருத்திராட்ச மாலையிருக்கும், மடியிலே விபூதி பை யிருக்கும். நாவிலே தேவாரம் இருக்கும்

இவ்வளவு இருந்தும் இவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை! ஆகவே அவர்கள் நல்லவர்களாய் இருப்பார்கள் என்று நம்பி விடக்கூடாது. காவியுடுத்தியவர்களின் நாணயத்தை மாலை 5 மணி முடிய மட்டும் பார்த்தால் போதாது. மாலை மயங்கியபின், அந்தி சந்திகளில் அவர்களை கவனிக்கவேண்டும். எங்கப் பக்கம் மறைகிறார்கள், மாலை திருவாசகத்தை வைத்துக் கொண்டு எந்த தெருவில் நுழைகிறார்கள், ருத்திராக்ஷக் காயை தடவிக் கொடுத்துக் கொண்டே எந்த வீட்டில் புகுகிறார்கள் என்று பார்க்க வேண்டும்! கோவிலுக்குப் போகிறார்களா, கோமளவல்லி வீட்டிற்கு போகிறார்களா என்று கவனிக்க வேண்டும்! வேலனை வணங்குகிறார்களா, வேல் விழியாளை வணங்குகிறார்களா என்று பார்க்கவேண்டும்! அதைப்போலவே மக்கள் நாட்டை ஆள்பவர்கள் காங்கிரஸ் காரர்களாயிருந்தாலும், கதர் கட்டியவர்களாயிருந்தாலும், தியாகிகளாயிருந்தாலும், தேசீய வாதிகளாயிருந்தாலும் எவராயிருந்தாலும் நன்றாய் ஆள்கிறார்களா, மனிதர் உரிமைகளை மதிக்கிறார்களா என்று கூர்ந்து கவனிக்க வேண்டும். கவனிப்பது அவர்கள் கடமை.

இந்த காளைக்கு நான் தான் புல் போட்டேன், வைக்கோல் தந்தேன், இதன் முகத்தை தடவிக் கொடுத்தேன், இதன் கொம்பை என் கையாலேயே சீவினேன் நானே அதற்கு வர்ணமும் தந்தேன் என்று சொல்லப்பட்ட காளை அவனையே முட்ட வந்தால் அதன் கொம்பு அவனை குத்தாமலா விடும்? அல்லது கூரிய கொம்பு நான் சீவிய கொம்பு என்னை

அது குத்தாது என்று எந்த புத்திசாலியாவது நம்பு வானு? நம்பமாட்டான்.

எப்படி, செல்லமாக வளர்த்த காளை, சொந்த மாட்டில் முளைத்த கொம்பு என்று நம்பக்கூடாதோ அப்படித்தான் நாடாள வந்தவர்கள் நயவஞ்சகர்கள் ஆகிவிட்ட நேரத்தில் அவர்கள் நம்ம கட்சிக்காரர் கள், நல்லது செய்யாமல் விடமாட்டார்கள் என்று நம்பக்கூடாது. ஊராள வந்தவர்கள் வழிதவறி சென்ருல் முறையாக நட என்று அறிவுறுத்த மாற்றுக்கட்சி வேண்டும். இதை மக்கள் மறந்து விடக்கூடாது. சதா ஆட்சியின் போக்கை கவனிக்க வேண்டும், ஆட்சி அத்துமீறி நடந்தால் மக்கள் வாழ்வு நலிந்து விடுமே என்று கவலைகொள்ள வேண்டும். அவசியமானுல் சர்க்காரைக் கண்டிக்கவும் வேண்டும்.

"ஒகோ! காங்கிரஸ் சர்க்கார் செய்வதையெல் லாம் கண்டிப்பதும் கண்டிக்கச்செய்வதும் தான் உன் வேலையா?" என்ருல் நிச்சயம் அதுவல்ல! காங்கிரஸ் சர்க்கார், முன்பு குறிப்பிட்டபடி, நல் லது செய்தால் ஆதரிக்கிரும். கெட்டது செய் தால் கண்டிக்கிரும். மது விலக்குக் கூடாது என்று சர்க்கார் மதுவிலக்கு சட்டம் கொண்டு வந்தபோது நாம் "இனி எல்லோரும் குடித்துத்தான் ஆகவேண் டும், மதுவிலக்கு கூடாது" என்னும் மடத்தனமான பிரசாரத்தில் ஈடுபடவில்லை. அதற்கு மாருக மது விலக்கு சட்டம் வந்தபோது அதை ஆதரித்திருக்கி ருேம். தீர்மானம் செய்தோம், பத்திரிகைகளிலே எழு திஞேம். இன்னும் சொல்லப்போனுல் நானும் எனது

நண்பர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் நல்ல தம்பி என்னும் திரைப்படத்தின் மூலம் மதுவிலக்கு பிரச்சாரம் செய்திருக்கிற அளவுக்கு இந்த மாகாண சர்க்கார் செய்திருக்காது. மாகாண சர்க்கார் மது விலக்கு பிரச்சாரத்தை பூலோகத்தோடு விட்டார்கள். "நல்லதம்பி" மூலம் நாங்கள் பூலோகம் திருந்தினால் மாத்திரம்போதாது தேவலோகத்திற்கும் இது தேவை என்ற அளவுக்கு சர்க்காரின் மதுவிலக்குச் சட்டத்தை ஆதரித்திருக்கிறோம்! சட்டம் காங்கிரஸ் சர்க்காரால் கொண்டு வரப்பட்டது என்பதற்காக கண் மூடித்தனமாக எதிர்க்கவில்லை, அதற்கு மாறாக ஆதரித்திருக்கிறோம்.

பின் ஜமீன் ஒழிப்பு சட்டம் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்தபோது ஜமீன்தாரர்கள் பழய ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்கள் என்ற பாசத்தால் ஜமீன் ஒழிப்பு பிரச்சாரம் செய்யாமல் விட்டுவிடவில்லை. சட்டத்தை எதிர்த்து விரோதமாக பிரச்சாரம் செய்தோமா? சட்டத்தை ஆதரித்தோம்; அதற்கு ஆதாரம் காட்டினேம். சென்னையில் நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் சட்டத்தை உருவாக்கும் கர்த்தா என்ற முறையில் அப்பொழுது மந்திரியாக இருந்த காளா வெங்கட்டராவும் பேசிய சர்வகட்சிக் கூட்டத்தில் நானும் அவர்களுடன் ஒன்றுகூடி சட்டத்தை ஆதரித்துப் பேசினேன். அதற்குப் பிறகு அறநிலைய பாது காப்பு மசோதா வந்தது. அதையும் ஆதரித்தோம்; எதிர்க்கவில்லை!

காங்கிரஸ் சர்க்கார் நல்லது செய்திருந்தால் பாராட்டியிருப்போம். ஆதரித்திருப்போம். ஆனல்

அதே போல அவர்கள் கெடுதல் செய்திருந்தால் தயவு தாட்சணியம் இன்றி கண்டித்திருப்போம். அது தான் நமது கொள்கை. அன்று மாத்திரம் அல்ல, இன்றும், என்றும் இதையே தான் செய்கிறோம், செய்வோம்! திராவிடர்களின் கலாச்சாரத்திற்கு ஊறு தேடுகிற நோக்கத்தில் கட்டாய இந்தியை காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்த நேரத்திலும், திராவிடநாடு திராவிடருக்கே என்பது தீங்கானது என்ற பிரச்சாரத்தில் காங்கிரஸ் தலைவர்களும், சர்க்கார் மந்திரிகளும் ஈடுபட்ட நேரத்திலும் நாங்கள் அவர்கள் செல்லும் பாதை தவறானது என்று கண்டிக்கத் தொடங்கினோம். இது போலவே சர்க்காரின் உணவுக் கொள்கையும் நூல் விநியோகிக்கும் முறையும் தவறானது என்று உணரும்போது சர்க்காரைக் கண்டிக்கிறோம்.

வேண்டுமானால் நாளையே இதே காங்கிரஸ் சர்க்கார் 16 அவுன்ஸ் அரிசி தருகிறேன் என்று ஒரு அறிக்கை விடட்டும். நாம் சர்க்காரைக் கண்டிக்கிறோமா பாருங்கள்! கொடுப்பார்களா காங்கிரஸ் சர்க்கார்? கொடுக்கிறோம் என்று சர்க்கார் அறிக்கை விட முடியுமா? முடியாது என்று வெட்ட வெளிச்சமாக அவர்களே கூறுகிறார்கள். அவர்களால் உணவுப் பஞ்சத்தைப் போக்க முடியவில்லை நாம் மக்கள் உணவில்லாமல் மடிகிறார்கள் அதற்கு அவசரமாக ஒரு மார்க்கம் கண்டு பிடிக்க வேண்டும் அதை சர்க்கார் செய்யவில்லை என்று சொன்னால் தங்களால் உணவுப் பஞ்சத்தை தீர்க்க முடியவில்லையே என்ற ஆத்திரத்தில் நாங்கள் பேசினால் இருக்கும் நிலைமைக்கு இவர்கள் தவறான வியாக்யானம் தருகிறார்

கள் என்றும் விஷயத்தை திரித்துக் கூறுகிறார்கள் என்றும் கூறுகிறார்கள். உணவுப் பஞ்சத்திற்கு தாங்கள் தரும் தெளிவைத் தரவில்லையே என்று சொன்னால் புதிதாகத் தேர்தல் திட்டம் தயாரிக்கப் பார்க்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்கிறார்கள். உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை. இருக்க இடம் இல்லை; சர்க்காரை ஏன் என்று கேட்கவோ ஆளில்லை. மக்கள் மாற்றுக்கட்சியில்லாமல் தவிக்கிறார்கள். இந்த நேரத்தில் மக்களின் குறையை சர்க்காருக்கு எடுத்துக் கூறவும், சர்க்காரின் தவறை கண்டித்து திருத்தவும் மாற்றுக்கட்சி தேவை, நல்ல மாட்டுக்கு மூக்கணாங்கயிறு இருப்பது போல என்று எடுத்துச்சொல்கிறோம். மக்கள் ஜனநாயகக் காலத்தில் சர்க்காரைக் கவனிக்கவும், கண்டிக்கவும், அவர்களுக்கு உள்ள உரிமையை மறந்து விடக்கூடாது என்று மக்கள் பால் எங்களுக்கு உள்ள அன்பாலும், ஜனநாயகத்தின் மேல் எங்களுக்குள்ள ஆர்வத்தாலும் சொல்லுகிறோமே தவிர மந்திரி பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நச்சு நினைப்பால் அல்ல!

ஆனால் சர்க்கார் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். எங்களை மாத்திரம் என்பதல்ல சர்க்கார் தவறு செய்தபோது அதை யார் கண்டித்தாலும் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு மாசு கற்பித்து வாயை அடக்கி விடுகிறார்கள். ஒலிபெருக்கி இருக்கிறது. அது திடீரென்று வேலை செய்யவில்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். பேசியவர் ஒலி பெருக்கி கொண்டு வந்தவரைப் பார்த்து "ஒலி பெருக்கி ஏன் சரியாக வேலை செய்யவில்லை?" என்று கேட்டால்

"பணம் நீயா கொடுத்தாய், நீ அல்ல பணம் கொடுத்தது பேசாதே" என்பது. பணம் கொடுத்து அழைத்துவந்த கழகக் காரியதரிசி கேட்டால் "நீயா ஒலிபெருக்கி முன் பேசுகிறாய் நீ பேசாமல் போ" என்பது. மக்கள் கேட்டால் "பணம் கொடுத்தவரும் அல்ல பேசுபவரும் அல்ல நீங்கள் யார் கேட்க" என்பது இந்த நிலையில் சரியாக ஒலிபெருக்கி கருவியை வைத்துக் கொள்ளாதவர் பதில் இருந்தால் நாம் அவரைப்பற்றி என்ன கருதுவோம்? அது மாதிரி தான் இந்த சர்க்கார் சரியாக நிர்வாகம் செய்ய வில்லை என்று கம்யூனிஸ்ட் கண்டித்தால் "நீ மாஸ்கோ கூலி, பேசாமல் இரு" என்பது—மீறிப் பேசினால் "சேலத்திலே விசித்திரமான சிறை இருக்கிறது ஆள் உள்ளே போனால் பிணமாக வெளியில் வரலாம். போக விருப்பமா?" என்பது—முஸ்லீம் சொன்னால் "நீ பாகிஸ்தானத்திற்கு போக வேண்டியவன் - நீ சும்மாயிரு" என்பது - ஜெயப்பிரகாஷ் நாராயணனும் அவரைச்சார்ந்த சோஷியலிஸ்டுகளும் கேட்டால் "அடுத்துவரும் தேர்தலில் பதவியைக் கைப்பற்ற முயற்சி செய்கிறாய், வாயை மூடு" என்பது சுபாஸ் சந்திர போஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கேட்டால் "நீங்கள் முதலில் சுபாஸ் போஸை தேடிக்கண்டு பிடியுங்கள், பிறகு இதை யெல்லாம் பார்த்துக்கொள்ளலாம்" என்பது—திராவிட முன்னேற்றக் கழகத்தார்களாகிய நாங்கள் கேட்டாலோ "நீங்கள் பூலோகத்திலேயே வாழத் தகுதியற்றவர்கள், நீங்கள் எல்லாம் நரகத்திற்கு போகவேண்டியவர்கள். நீங்கள் பேசாமல் இருங்கள்" என்பது, என்ற முறையில் சர்க்காரின் பதில் இருக்கிறது! இப்படி யார் கண்டித்தாலும்

ஏதாவதொரு மாசு கற்பித்து "நீ பேசாதே" "நீ வாயை மூடு" "நீ சும்மா இரு" என்றால் யார் தான் சர்க்கார் தவறு செய்யும்போது, செய்யாதே என்று சொல்வது? அல்லது பாராளுபவர்கள் கெட்ட வழியில் சென்றால் யாரும் தட்டி கேட்கக்கூடாதா?

இப்பொழுது நடைபெறும் ஆட்க்சிகு ஜனநாயக சர்க்கார் என்று பெயரா? கூட்டம் கூட்டி எங்கள் குறையை கூறிடுவோம் என்றால் 144 போடுகிறார்கள்—நாடகம் நடத்தினால் தடை என்கிறார்கள்—பாட்டு பாடினால் "பாடாதே" என்கிறார்கள்—கருப்புக் கொடிபிடித்தால் "அடி" என்கிறார்கள்—கொஞ்சம் அடிப்படை உரிமையில் ஆசை வைத்து தடையை மீறினால் "அடி! அழ அழ அடி, இரத்தம் ஒழுகும் வரை அடி, சீறினால சிறையில் தள்ளு, உருமாறினாலும் உயிர் போகும் தறுவாயானாலும் அவர்களை அதிலிருந்து விடாதே வெளியே" என்கிறார்கள்! இதை "கப்சிப்" சர்க்கார் என்றுசொல்ல முடியுமே தவிர எப்படி ஜனநாயக சர்க்கார் என்று கூற முடியும்? ஜனநாயக சர்க்கார் என்று சொல்வதற்கு இலட்சணங்கள் இவைதானா? நாடாள்வோருக்கு நாட்டு மக்களிடம் நல்லெண்ணம் இருக்கிறது என்பதை இவைகள் மூலம் தான் காட்டுகிறார்களா? நாடாள்வோருக்கு ஆற்றல் இருந்தால், தைரியமாகக் கூறட்டும்—நாங்கள் ஹிட்லர் போலத்தான் ஆள்வோம். நாங்கள் முசோலினி போலத்தான் ஆள்வோம். நாட்டில் ஒரே கட்சித்தான் இருக்கலாம்; அதுவும் காங்கிரசாக இருக்கவேண்டும். காங்கிரசாக இருப்பதிலும் இப்பொழுதுள்ள காங்கிரஸ் கட்சி தான் இருக்க வேண்டும். கிருபளானி காங்கிரஸ் கட்சியாக

இருக்கக் கூடாது என்று சொல்லட்டும். இப்படி சொன்னால் அவர்கள் செயலில் விவேகம் இல்லாவிட்டாலும் வீரமாவது இருக்கும். இப்பொழுது இவர்கள் செயலில் வீரமும் இல்லை, விவேகமும் இல்லை!

காங்கிரஸ் தலைவர்களும், சர்க்கார் மந்திரிகளும் உலகத்தின் முன் கூச்சமில்லாமல் துணிந்து இந்தியாவில் குடியரசு ஆட்சி நடக்கிறது என்று கூறுகிறார்கள் இங்கு நடக்கும் கோலாகலம் அங்கே யாருக்குத் தெரியும்? மேனாட்டு சரித்திரம் படித்தவர்களுக்குத் தெரியும், குடியரசு ஆட்சியில் அரசாளும் கட்சியின் போக்கு மக்களுக்குப் பிடிக்காவிட்டால் அடுத்து வரப்போகும் தேர்தல்வரை காத்திருந்து தேர்தலில் தங்கள் வோட்டை அந்தக் கட்சிக்கு போடாமல் அவர்களுக்கு பிடித்த கட்சிக்கு போடுவார்கள். அந்தக் கட்சி ஆட்சி செய்ய ஆரம்பிக்கும். ஆனால் ஒரு தேர்தலுக்கும் மறு தேர்தலுக்கும் இடையே பெரும்பாலும் ஐந்தாண்டுகள் ஓடியாக வேண்டும். அதற்குள் அந்த இடையிலே உள்ள ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்யும் கட்சிமீது வெறுப்பு ஏற்பட்டால் மந்திரிகள் வரும்போது தங்கள் மன வெறுப்பைக் காட்ட கறுப்புக்கொடி பிடிப்பார்கள். ஜனநாயக ஆட்சியில் கருத்து வேற்றுமையைக் காட்ட கருப்புக்கொடி மந்திரிகள் வரும்போது காட்டுவது என்ற முறையை மக்களின் அடிப்படை உரிமை என்று உலகத்திலுள்ள நாகரீக நாடுகள் எல்லாம் ஒத்துக் கொள்ளும். ஆனால் ஜனநாயக ஆட்சி நடப்பதாக கூறப்படும் இந்நாட்டில் நடப்பதென்ன?

கொஞ்ச நாட்களுக்குமுன் சென்னைக்கு மத்திய சர்க்கார் மந்திரி ஆச்சாரியார் வந்தபோது ஜனநாயக

முறைப்படி எங்கள் தோழர்கள் தங்கள் வெறுப்பைக் காட்ட கருப்புக்கொடி பிடித்த நேரத்தில் அவர்களை சர்க்காரின் சாதாரண போலிசும், மலபார் ஸ்பெஷல் போலிசும் சேர்ந்துகொண்டு நாயை அடிப்பதுபோல் துரத்தி துரத்தி அடித்தார்கள். ஏன் என்று கேட்டால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்தார்கள் என்று சொல்லுகிறார்கள். போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளத்தானா போலிஸ்? போலிஸ் அப்பொழுது எங்கே போனது? போலிஸ் இருந்த இடத்தில்தான் இருந்தது. நமது தோழர்களும் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் செய்யவில்லை. போலிஸ்காரர்களை நமது தோழர்கள் எங்கே நாங்கள் நிற்கலாம் என்று கேட்டார்கள். இந்த ஓரம் நிற்க லாமா, அந்த ஓரம் நிற்கலாமா, 100 பேர் போதுமா 1000 பேர் வரலாமா என்றெல்லாம் கேட்டுவிட்டு சட்ட திட்டத்திற்கு கட்டுப்பட்டு கருப்புக்கொடி பிடிக்கும் நேரத்தில்தான் சர்க்காரின் போலிஸ் படைகள் எங்கள் தோழர்களை நாயை அடிப்பதுபோல் துரத்தி துரத்தி அடித்தன, இந்த நாட்டிலுள்ள தேசியத் தாள்கள் அதைப்பற்றி என்ன எழுதின?'' "கருப்புக்கொடி காட்டும் முயற்சி தோல்வி யடைந்தது!'' தோல்வி யடையாமல் வெற்றியா பெறும்! கையிலே தடியுடன், இடையிலே வாளுடன், நெஞ்சிலே வஞ்சனையுடன் கையிலே ஒன்றுமில்லாத எங்கள் தோழர்களை ஓட ஓட அடித்தால்.........? வெற்றி தோல்வியைப்பற்றி நாம் கவலைப் படவில்லை; அது வீரனுக்கு அழகும் அல்ல!!

கையிலே ஒன்றுமில்லாத எங்கள் தோழர்களை சர்க்கார் போலிஸ் படைகள் காரணமின்றி தடி-

கொண்டு தாக்கியபொழுது அவர்கள் உடலிலிருந்து இரத்தம் ஒழுகியதே, அதுபற்றி, கண்ணீர் விட வில்லையே காங்கிரஸ்காரர்கள் யாரும், கண்டிக்க வில்லையே என்றுதான் வருத்தப்படுகிறோம்.

ஜனநாயக ஆட்சியில் அடிப்படை உரிமைக்காக அறப்போர் நடத்தும் தோழர்கள் அரசாங்கத்தால் அநியாயமாக அடிக்கப்பட்டு அவர்கள் தேகத்திலிருந்து ரத்தம் ஒழுகுகிறது என்றால் அதைக்கண்ட மக்களும் கேட்ட மக்களும் கண்ணீர் விட்டிருக்க வேண்டும். மனிதன் உரிமைகளின் மேல் கவலையுள்ள மக்களுடைய கண்ணீரும் இலட்சியத்திற்காக இன்னலைத் தாங்கும் எங்கள் தோழர்களின் இரத்தமும் ஒன்றாக வேண்டும். என்று மக்களுடைய கண்ணீரும் எங்களுடைய இரத்தமும் ஒன்றாகிறதோ அன்றுதான் உண்மை ஜனநாயகம் உதிக்க முடியும்; நம் இன்பக் கனவு நனவாகும்!

ஆனால் எங்கள் தோழர்கள் தேகத்திலே இரத்தம் ஒழுகியதைக் கேட்டு எந்த தேசியத் தோழர்களுக்கும் கண்ணீர் வரவில்லை. ஏன் கண்ணீர் வரவில்லை? நாட்டிலே நடமாடும் மக்கள் கூறட்டும். காங்கிரஸ் காரர்களை, காங்கிரஸ்காரர்கள் என்று குறிப்பிடும் போது, திடீர் காங்கிரஸ்காரர்களை அல்ல, தேர்தல் காங்கிரஸ்காரர்களை அல்ல, பேரம் பேசும் காங்கிரஸ் காரர்களை அல்ல, "அளக்காதே அண்ணாதுரை இன்னும் ஆறு மாதம் பொறுத்திரு" என்று என்னிடம் நேரே கூறிடும் காங்கிரஸ்காரர்களை அல்ல, உண்மை காங்கிரஸ்காரர்கள் உள்ளத்தில் தழும்பு ஏறியவர்களை

தாங்கள் பகவத்சிங் பரம்பரை என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை அடைபவர்களை, வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெருட்டியடித்த காங்கிரஸ் வீரர்களைக் கேட்கிறோம், அவர்கள் கூறட்டும்!

வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்கும் இவர்கள் நடத்தும் ஆட்சிக்கும் என்ன வித்தியாசத்தைக் காணுகிறீர்கள்?

அவர்கள் பாரதியார் பாட்டுக்கு தடை விதித்தார்கள். இவர்கள் பாரதிதாசன் பாட்டுக்கு தடை விதிக்கிறார்கள். அவர்கள் தேசிய கவி பாடிய விசுவநாததாசுக்கு தடை போட்டார்கள். இவர்கள் 'விடுதலை'க்கும் 'திராவிட நாட்'டிற்கும் தடை போடுகிறார்கள், அவர்கள் தேசிய புத்தகங்களை பறிமுதல் செய்தார்கள். இவர்கள் திராவிடநாடு சம்பந்தமான புத்தகங்களை பறிமுதல் செய்கிறார்கள். அவர்கள் மக்களின் தலைவர்களை சிறையில் தள்ளினார்கள். இவர்களும் மக்களின் தலைவர்களை சிறையில் தள்ளுகிறார்கள். அவர்கள் 144 போட்டார்கள் மக்கள் கூட்டம் கூடாமல் தடுக்க - இவர்களும் 144 போடுகிறார்கள் மக்கள் கூட்டம் கூடாமல் தடுக்க! அவர்கள் தேசியத் தலைவர்களுடன் போகுமிட மெல்லாம் கூடவே குற்றம் கண்டு பிடிக்கும் சி. ஐ. டி. (C. I. D.) கூட்டத்தையும் அனுப்பினார்கள். இவர்களும் நாம் போகுமிடமெல்லாம் கூடவே குற்றம் கண்டுபிடிக்கும் அவர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் கி. பி. கோ. 153-வது செக்‌ஷனை நம்பி வாழ்ந்தார்கள். இவர்களும் கி. பி. கோ. 153-வது செக்‌ஷனை நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் தோலில் காணும் நிற வித்தியாசத்தைத் தவிற வேறு என்ன வித்தியாசத்தை நீங்கள் காண்கிறீர்கள்?

வெள்ளைக்காரன் சர்க்கார் போய் காங்கிரஸ் சர்க்கார் வந்து என்ன சுகத்தைக் கண்டோம். நான் ஒரு புத்தகம் எழுதினேன். அதற்காக சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டேன். அந்த புத்தகத்தின் பெயர் 'ஆரிய மாயை' அது எழுதப்பட்டது 1940-ல். அதற்காக வழக்குத் தொடரப்பட்டது 1950-ல். புத்தகம் எழுதி ஒன்பது ஆண்டுகள் ஆன பிறகு ஆறு பதிப்பிலே ஒவ்வொரு பதிப்புக்கும் சுமார் 3000 வீதம் மொத்தம் 18000 புத்தகங்கள் வெளி வந்த பிறகு, அதை சுமார் லட்சத்திற்குமேல் மக்கள் படித்து அந்த லட்சம் மக்களிலும் குறைந்தது 2000 பேர்கள் பக்கத்துக்கு பக்கம் பாராமல் ஒப்புவிக்கும் சக்தி பெற்ற பிறகு, அதாவது குதிரை கோவில்பட்டியில் பறிபோகி, அது வேலூருக்கு வந்தான பிறகு கொட்டிலை இழுத்துப் பூட்டுவது போல், நான் எழுதிய புத்தகத்திற்கு தடை போடுகிறார்கள். 1941-லே எழுதிய புத்தகத்திற்கு 1950-லே குற்றம் காண்கிறார்கள். 9 வருட காலமாக உண்டாக்காத வகுப்புத் துவேஷத்தை இப்பொழுது மாத்திரம் அது எப்படி உண்டாக்கும் என்பது தெரியவில்லை, ஆரிய மாயை புத்தகம் எழுதியதற்காக என்னைச் சிறையில் போட்டுவிட்டார்கள். சரி! அதைப் படித்த எண்ணற்ற வாலிபர்களை என்ன செய்யப்போகிறார்கள்? அவர்கள் இதயத்திலே குடிகொண்டிருக்குமே 'ஆரிய மாயை' கருத்துக்கள் அதற்கு என்ன செய்யப்போகிறார்கள்? ஒவ்வொரு வாலிபராகக் கூப்பிட்டு "உன் உள்ளத்திலே 'ஆரிய மாயை' கருத்து இருந்தால் அதை கக்கு" "நீ வா உன்னுடைய எண்ணங்களிலே 'ஆரிய மாயை'க் கருத்துக்கள் கலந்திருந்தால் அவைகளை எடுத்து வீசிவிடு"

என்று சொல்லப்போகிறார்களா? சிறையில் தள்ளி விட்டார்கள், புத்தகம் எழுதிய குற்றத்திற்காக. அந்த புத்தகத்திலே உள்ள கருத்துக்களை மனப்பாடம் செய்துவிட்ட எண்ணற்ற வாலிபர்களை என்ன செய்யப் போகிறார்கள்? அவர்களையும் சிறையில் தள்ளிவிட முடியுமா? அது அவ்வளவு சுலபமா? அவர்கள் அதை ஒத்துக்கொள்வார்களா?

'ஆரியமாயை' அவ்வளவு என்ன ஆபத்தான புத்தகமா? வெள்ளைக் காரர்கள் காலத்தில் இல்லாத வகுப்பு துவேஷத்தை இப்பொழுது புதிதாக போதிக்கிறதா? ஒருவர் எழுதிய புத்தகத்தைக் கண்டு அவ்வளவு அச்சமா? அதைப் படித்தால் ஆட்சி பீடம் ஆடிவிடும் என்றால் ஆட்சிபீடம் அவ்வளவு பல ஹீனமானதா? அதை நாட்டிலே உலவ விட்டால் பூகம்பம் ஏற்பட்டு விடுமா? எழுத்தாளன் பேனாவைத் தொட்டால் சர்க்காருடைய கஜானாவின் சாவி காணாமல் போய்விடும் என்ற கிலி இருந்தால் அந்த கிலி இருக்கலாமா? பேனாவீரர்கள் உங்களிடம் கிடையாதா? 'கல்கி' ஆசிரியருக்கு தெரியாதா? "விகடன்" ஆசியருக்குத் தெரியாதா? "மித்திரன்" ஆசிரியருக்குத் தெரியாதா? ஏன் 'தினமணி' ஆசிரியர் தோழர் சிவராமனைக் கூப்பிட்டு "எடு பேனாவை இந்தா காகிதம் எழுது ஆரிய மகிமையைப் பற்றி" என்று கட்டளையிட்டு இதோ "ஆரிய மகிமை" என்று காட்டலாமே, தைரியமிருந்தால்? நேர்மையிருந்தால்! அதையல்லவா செய்திருக்க வேண்டும். "ஆரிய மாயையும்" நாட்டிலே உலவட்டும் 'ஆரிய மகிமையும்" நாட்டிலே உலவட்டும். மக்கள் நீதிபதிகள். அவர்கள் மனம்

உரைகல். பக்கத்துககுப் பக்கம் இரண்டையும் மக்கள் படிக்கட்டும். அபத்தம் இருந்தால் எடுத்து வீசி, எறிந்து விடுகிறார்கள். தேவை என்றால் எடுத்துக் கொள்கிறார்கள். இதுவல்லவா நேர்மை, நீதி, அறிவு, ஆண்மை உள்ளவர்கள் செய்ய வேண்டியது. அதை விட்டு 'ஆரிய மாயை' புத்தகத்திற்கு மாத்திரம் தடை போடுவது என்ன நியாயம்?

'ஆரியமாயை'யாவது ஒரு நூல் வடிவிலே எழுதப்பட்டது - பெரியார் நூல் எழுதவில்லை. அவர் எங்கெங்கோ, எப்பெப்பொழுதோ பேசிய பேச்சில் குறிப்பிட்டவைகளையும், உட்கார்ந்திருக்கும் போது சொன்னவைகளையும், அவர் பத்திரிகையில் எழுதியவைகளையும் சேகரித்து ஒருவர் "பெரியார் பொன்மொழி" என்று அச்சிட்டு விற்றதற்காக பெரியாருக்கு சிறைதண்டனை தந்தார்கள். தரலாமா? ஜனநாயக ஆட்சியில் எழுத்துரிமை கிடையாதா? வெள்ளைக்காரர்கள் போலத்தான் ஆளத் தெரியுமா?

அல்லது எங்களை மாத்திரம் தான் கஷ்டப் படுத்துகிறீர்களா? எங்களை சிறையில் தள்ளிவிட்டால் மக்களை வாழவைத்து விடமுடியுமா? மக்களுக்கு வயிறார உணவு, மானம் காக்க உடை, அறிவுவளர கல்வி, நோய்தீர மருந்து, நல்ல பாலங்கள், விஞ்ஞான நிலையங்கள், கலா மண்டபங்கள் ஆகியவைகளைக் கொடுத்தும் நீங்கள் வாழ்வதற்கு நாங்கள் தடையாக இருக்கிறோம் என்றால் எங்களை தாராளமாக சிறையில் தள்ளட்டும். இப்பொழுது உள்ளதைவிட சிறை வாழ்வு மேல் என்று சிறைக்குப் போய் விடுவோம். ஆனால் நாங்கள் சிறை

யில் படுகிறதைவிட நீங்கள் அதிகமாக வெளியே கஷ்டப்படுகிறீர்கள்.

தலைமுறை தலைமுறையாக அரிசி சாப்பிட்டவர்களுக்கு அரிசி இல்லை. நெல் விளையும் விளை நிலங்கள் பல இருந்தும் அரிசி இல்லை கோதுமை சாப்பிடு என்கிறார்கள். உலகத்திலேயே மலிவான உணவு அரிசி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அரிசியை உலையில் போட்டு ஒரு கொதி கொதித்தவுடன் ஒரு உப்புக் கல்லைப் போட்டு இறக்கி வைத்து விடலாம். சாப்பாடு தயாராகி விடும். கோதுமையில் அவ்வளவு சுலபமாக சாப்பாடு செய்துவிட முடியாது. கோதுமையை ரொட்டியாகவோ உப்புமாவாகவோ செய்து தான் சாப்பிட முடியும். அவைகளுக்கும் உபகரணங்கள் தேவையாயிருக்கும். ஏழையாயிருந்தால் காரமான சட்னி. பணக்காரராயிருந்தால் பலகாரங்கள் வேண்டியிருக்கும். சர்க்காருக்கு தூதுவர்கள் உள்ளது போல கோதுமை ஆகாரத்திற்கு பலகாரங்கள் சட்னி போன்ற உபகரணங்கள் வேண்டியிருக்கும். அதற்கு தமிழன் பட்ஜட் இடம் கொடுக்காது. அதற்காகத்தான் தமிழர்கள் அரிசி வேண்டும் என்கிறார்கள். ஆனால் இதை புரிந்து கொள்ளாமல் அரிசி கேட்டால் ஒரு அமைச்சர் கோதுமை சாப்பிடு என்கிறார், ஒரு அமைச்சர் பருத்திக் கொட்டையைத் தின்னுங்கள் என்கிறார். இன்னொரு அமைச்சர் புளியங்கொட்டையைத் தின்னுங்கள் என்கிறார்—விளையாட்டுக்குச் சொல்லவில்லை - மத்திய சர்க்கார் மந்திரி முன்ஷிதான் அப்படி சொன்னார்.

இதற்கு முன்பு சரித்திரத்தில் மக்கள் உணவு பஞ்சத்தால் தவிக்கும் பொழுது இவ்வளவு கேவல

மாக ஒரு பொறுப்புள்ள சர்க்கார் அதிகாரி கூறிய, சம்பவத்தை உலகத்திலேயே ஒரே ஒரு நாட்டில் தான் ஒரு தடவை நிகழ்ந்ததாக நாம் படித்திருக் கிறோம். பிரான்சில்பர்கண்டி என்று ஒரு மாகாணம் இருந்தது. அதற்கு பவ்லான் - என்பவன் கவர்னர். அவன் காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது, இப்பொழுது இங்கு இருப்பது போல. பவ்லான் ஆட்சியில் ரொட்டிக் கிடங்குகளுக்கு முன் இங்கு மக்கள் அரிசிக் கடங்களுக்கு முன்னிற்பது போல வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். வாரத்தில் அநேக நாட்கள் இங்கே அரிசிக் கடை களின் கதவுகள் பூட்டிக் கிடப்பது போல் அங்கே ரொட்டிக் கிடங்குகளின் கதவுகள் பூட்டிக் கிடந்தன, பாட்டாளிகள் ரொட்டி கிடைக்காமல் திண்டாடினார் கள். பவ்லான் மாளிகையில் மதோன் மத்தர்களுடன் மதுவுண்டு கேளிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந் தான். மக்கள் மாளிகைக்கு வெளியே "பசி" "பசி" என்று கூறினர். கொலு மண்டபத்தில் வீற்றிருந்த பவ்லான் காதில் இது விழுந்தது. வெளியே வந்து மக் களைப் பார்த்தான். "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். மக்கள் "பசி" "பசி" என்று கூவினர். "என்ன அவ்வளவு பசியா?" பவ்லான் கேட்டான். "ஆம் பிரபோ! நாங்கள் மாடாய் உழைக் கிறோம் இருந்தும் உண்ண உணவில்லை பசி" மக்கள் பதில் கூறினர். "நீங்கள் மாடுபோலவா உழைக் கிறீர்கள்" மீண்டும் பவ்லான் கேட்டான். "ஆம்" என்றனர் மக்கள். "அப்படியானல் நீங்களும் புல்லைத் தின்னுங்கள்" என்று கூறிவிட்டு பவ்லான் உள்ளே போய்விட்டான். உள்ளே போனவன் வெளியே வர

வில்லை. வெளியே கூடியிருந்த மக்கள் கலைந்துவிட்டார்கள்.

ஆனல் கவர்னர் மேல் இருந்த ஆத்திரம் அவர்கள் இருதயத்தைவிட்டு வெளிவரவில்லை. உடனே ஒருவன் ஏன் பவ்லான் அவ்வளவு ஆணவமாக பதில் கூறினன் என்று கேட்டான். "அவன் கையில் ஆட்சியிருப்பதால்" பக்கத்தில் உள்ளவன் பதில் கூறினன. "அவனை அழித்தால் என்ன?" இவன் அவனுக்குச் சொன்னன். செய்தி இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்கு போனது அந்த இடத்திலிருந்து அதற்கப்புறம் இருந்த பக்கத்திற்குப் போனது, பாரிசில் பரவியது. பிரான்சே புரட்சியாக மாறிவிட்டது. சீமான்களின் சிரங்கள் வெட்டுப் பாறையின்மேல் கொண்டு வந்து துண்டிக்கப் பட்டன. கடைசியில் "பர்கண்டியின் கவர்னரை பவ்லான் எங்கே இழுத்துவா அவனை" என்றனர். பவ்லான் இழுத்து வந்து அவன் தலையை வெட்டுப் பாறையில் சாய்த்து 'போடுங்கள் கத்தியை' என்றனர். போடப்போகின்ற நேரத்திலே கூட்டத்தில் "வெட்டாதே" என்று ஒரு குரல் கேட்டது. "ஏன் வெட்டாதே என்கிருய்?" என்று மக்கள் கேட்டனர். மீண்டும் "வெட்டாதே" என்றது அந்தக் குரல். "முடியாது. கொடியோன் இவனை வெட்டத்தான் வேண்டும்" என்று கூவினர் மக்கள் "வேண்டாம் சற்று பொருங்கள் காரணம் இருக்கிறது" என்று ஓடோடி வந்தான் ஒருவன். கையிலே ஒரு பிடி புல்லைக்கொண்டுவந்து பவ்லான் வாயில் திணித்தான். "இப்பொழுது வெட்டுங்கள் அந்த பாதகனை" என்ருன். பவ்லான் தலை வெட்டுண்டு மண்ணிலே புரண்டது. அந்த துர்பாக்ய மான நிலை இந்த நாட்டு மந்திரிகளுக்கு ஏற்படவேண்

டும் என்பதல்ல நம் கோரிக்கை. பழய வரலாற்றில் நடந்த அந்த சம்பவத்திற்கு பிறகு இப்பொழுது தான் இரண்டாவது தடவையாக இந்த நாட்டில் ஒரு மந்திரி 'பசி-அரிசி தேவை' என்று சொல்லும் மக்களைப்பார்த்து புளியங்கொட்டையைத் தின்னுங்கள் என்று சொல்லியிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டவே! ஆனால் நமது மந்திரிகள் அன்று பிரான்சில் நடந்த சம்பவம் போதிக்கும் பாடத்தை மறந்துவிடக்கூடாது. ஆள்கிறோம் ஆட்சி நமது கையிலே, எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்னும் ஆணவம் கூடாது. அப்படியிருந்தாலும் அதை எதிர்த்து பிரஞ்சு மக்கள் போல பயங்கரப்போர் புரிவதல்ல நம் நோக்கம். அறப்போரில் பிரியம் உள்ளவர்கள். பலாத்காரத்தை ஒருபோதும் தூண்டமாட்டோம்.

சர்க்கார் உணவுப் பஞ்சத்தையும் துணிப் பஞ்சத்தையும் போக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியை இவர்கள் பாராட்டுவதில்லை என்று சிலர் சொல்லுகிறார்களே, இவர்கள் இதுவரை இரண்டு பஞ்சங்களையும் போக்க எடுத்துக்கொண்ட முயற்சி என்ன பலனைத் தந்தது? விவசாயி விதையில்லை என்கிறான், நெசவாளி நூல் இல்லை என்கிறான், தொழிலாளி வேலை இல்லை என்கிறான், மாணவர்கள் படிக்க இடமில்லை என்கிறார்கள். பிணிபோக்க மருத்துவ மனைகளில்லை. மருத்துவ மனைகளிலே மருந்தில்லை, மருந்திலே பிணிபோக்கும் தன்மையில்லை. எங்கும் எதை எடுத்தாலும் பஞ்சம். இந்த ஆட்சியை பாராட்டவில்லை யென்றால் யார் பாராட்டுவார்கள் ?

நம் நாட்டிலே இருக்கும் உண்மை நிலையைச் சொன்னால் நமது சர்க்கார் மந்திரிகளும் காங்கிரஸ் தலை

வர்களும் தாங்கள் போகுமிடமெல்லாம் மக்களிடம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொய்யர்கள், எதையும் அழகாக பேசி விடுவார்கள். அவர்கள் மயக்க மொழியில் மயங்கிவிடாதீர்கள்; சொல்லிலே சொக்கிவிடாதீர்கள்; அவர்கள் பத்திரிகைகளைப் படிக்காதீர்கள் என்று உபதேசிக்கிறார்கள். மக்கள் என்ன அவ்வளவு மட்டமாகவா இருக்கிறார்கள் எதைச் சொன்னாலும் கேட்டுவிட! ஒரு நாளும் இல்லை.

ஒலிபெருக்கி இருக்கிறது. பேசுவதை தொலைவிலும் கேட்கும்படி அது செய்கிறது என்று சொன்னால் நம்புவார்கள். அப்படிச் சொல்லாமல் 'நான் காளி உபவாசி. கூட்டத்திற்கு வருமுன் காளியை கும்பிட்டு விட்டு பேச வந்திருக்கிறேன். என் காளியின் அருளால் தான் நான் இங்கு பேசுவது தொலைவில் தெளிவாக கேட்கிறது என்று சொன்னால் நம்புவார்களா? நான் தஞ்சையிலிருந்து இங்கு வரும் வழியில் ஆடுதுறையில் சற்று தங்கிவிட்டுவந்தேன் என்றால் நம்புவார்கள். அதைவிட்டு நான் வரும் வழியில் ஆடுதுறையில் உள்ள ஒரு ஆடு பட்டுக்கோட்டையிலுள்ள ஓநாயின் மீது பாய்ந்ததைப் பார்த்தேன், ஓநாய்க்கும் ஆட்டுக்கும் நடந்த சண்டையில் ஆடு வெற்றி பெற்றது என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? நம்பமாட்டீர்கள்.

ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது. மக்கள் எதைச் சொன்னாலும் காரணமில்லாமல் நம்பமாட்டார்கள். மக்கள் நாம் சொல்லுவதை நம்புகிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் என்று சர்க்காரும் காங்கிரஸ் தலைவர்களும் யோசிக்க வேண்டும். நாம் மக்கள் உள்ளத்தில் ஊடுறுவும் எண்ணங்

களைச் சொல்கிறோம். உணவுப் பஞ்சத்திற்கு காரணம் என்ன என்கிறார்கள். நாம் காரணம் சொல்கிறோம். மக்கள் உடையில்லையே என்று உருகுகிறார்கள். நாம் உடைபெற வழி இதோ என்று சொல்கிறோம். இந்த மாகாணத்தில் உற்பத்தியாகும் நூல் இங்குள்ள நெசவாளிகளுக்குப் போதாதா என்று கேட்கிறார்கள். நாம் அதை வடநாட்டுக்கு அனுப்பாமல் இந்த மாகாணத்திலுள்ள நெசவாளிகளுக்கே விநியோகித்தால் போதும் என்கிறோம். ஆட்சி சரியாயில்லையே என்று திகைக்கிறார்கள். நாம் ஆட்சி அலங்கோலமாகி விட்டதைக் காட்டுகிறோம். அவர்கள் எதிர்பார்ப்பதைச் சொல்கிறோம். அவர்கள் ஏக்கம் குறைகிறது. இதுதான் நாம் சொல்வதை அவர்கள் கேட்பதற்குக் காரணமே தவிர வேறொன்றுமில்லை. இல்லையென்றால் 1½ வருட காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 600 கிளைக் கழகங்கள் ஏற்பட முடியுமா? கட்சி இவ்வளவு தூரம் வளரவும் பலமடையவும் முடியுமா?

சீமான்கள் தயவு இந்தக்கழகத்திற்கு இருக்கிறதா? 1000, 2000 தருகிறார், ஆகவே அவர் நெற்றியிலே விபூதி இருந்தால் பரவாயில்லை என்று சொல்லுகிறோமா? 1000, 2000 கொடுத்துவிட்டு அடுத்த நாள் பூசாரி ஆகுபவர்களைவிட நெற்றியிலே நீறு பூசிக்கொள்ளாதவர்களைத்தானே நாம் நமது தோழர் என்று மதிக்கிறோம். கொள்ளை லாபம் அடிப்பவர்கள், கள்ள மார்க்கட்காரர்கள், கொட்டியளப்பவர்கள், மிட்டா மிராசுகள் இவர்களில் யாரையாவது அண்டவிடுகிறோமா? அப்படியிருந்தும் எங்கள் கழகம் வளர்

கிறது என்றால் அதிலே உள்ள ஜீவசக்திதான் அதற்குக் காரணம்.

மக்கள் நம் மயக்க மொழியில் விழுந்துவிடக் கூடாது என்று காங்கிரஸ் தலைவர்களும், மந்திரிகளும் கூறுகிறார்களே, மக்களை மயக்க நாம் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தரா? அல்லது ஆண்டவன் முதலடி எடுத்துக்கொடுக்க இரண்டாவது அடிபாடும் அளவுக்கு ஆண்டவனின் அருளைப் பெற்றவரா? எல்லோரையும்போல சாதாரணமானவர்கள்-சாமானிய மானவர்கள்!

நாம் சொல்வதை மக்கள் கேட்கிறார்கள், நாம் எழுதுவதை மக்கள் போற்றுகிறார்கள், நாம் பேசுவதைக்கேட்டு மக்கள் மகிழ்ச்சி யடைகிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் இருக்க முடியும். வீட்டிலே விளையாடிக்கொண்டிருந்த பிள்ளை திடீரென வீட்டை விட்டு வெளியே வந்து வழி தவறி வீதியின் நடுவே போகும் போது அதை ஒரு கார் அரைக்க வந்த நேரத்தில் வழியில் போன ஒருவர் அந்த குழந்தையை ஆபத்திலிருந்து காப்பாற்றி அதைத் தூக்கிக் கொண்டு போய் குழந்தையின் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து உங்கள் குழந்தை வழி தவறி சென்ற நேரத்தில் ஒரு கார் அரைத்துவிட இருந்தது. நல்ல வேளையாக நான் காப்பாற்றினேன். இல்லை யென்றால் இந்நேரம் குழந்தை இறந்து போயிருக்கும் என்று சொன்னவுடன் குழந்தையின் சொந்தக்காரர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார்கள் அல்லவா? அதே போல், நான் உங்களிடமிருந்து பிரிக்கப்பட்டு வழி தவறி போய்விட்ட 'திராவிடம்' என்னும் குழந்தை

வீட்டிலிருந்து திடீரென வெளியே வந்த குழந்தை வீதியிலே போகும் காரிலே சிக்கி அரைபட இருந்தது போல், ஆரிய மாயை என்னும் பயங்கர யந்திரத்தில் அகப்பட்டு மாள இருந்த நேரத்தில் நான் அதை தப்புவித்து அதைக் கொண்டு வந்து 'திராவிடத்தைக்' காணுமல் தவிக்கும் பெற்ருேர்களாகிய மக்களிடம் கொடுத்து "பார்த்தீர்களா, உங்கள் குழந்தையை உங்கள் அருமை குழந்தை ஆரிய மாயை என்னும் பெரிய இயந்திரத்தில் அகப்பட்டு மாள இருந்தது என்று சொல்ல" 'நல்ல வேளையாக நீங்கள் காப்பாற்றினீர்கள். இல்லாவிட்டால் இந்நேரம் இறந்து போயிருக்கும்' என்றுகூறி மகிழ்ச்சி அடைகிருர்கள், பிள்ளையைப் பறிகொடுத்த பெற்ருேர். பிள்ளையை ஆபத்திலிருந்து தப்புவித்து திரும்பி அவர்களிடமே பிள்ளையை ஒப்படைத்தவரிடம் எப்படி மகிழ்ச்சி யடைவார்களோ, அப்படித்தான் நான் ஆரிய மாயையில் சிக்கி மாள வேண்டியிருந்த திராவிடத்தைக் காப்பாற்றி மீண்டும் கொண்டுவந்து மக்களிடம் காட்டும் போது மக்கள் மகிழ்ச்சி யடைகிருர்கள் என்று சொல்ல முடியுமே தவிற வேறு என்ன சொல்லமுடியும். வேறு என்ன காரணம் இருக்கிறது சொல்ல?

இதற்கு முன்பு பஞ்சம் வந்திருந்தால் நாட்டை வெள்ளைக்காரன் ஆள்கிருன், வெளி நாட்டான் ஆள்கிருன், அன்னிய நாட்டுக்கொடி பறக்கிறது, ஆட்சி நடக்கிறது—அதனுல் தான் பஞ்சம் என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். இப்பொழுது நடக்கிறது நமது ஆட்சி, யூனியன் ஜாக் பறந்த இடத்தில் நமது மூவர்ணக்கொடி பறக்கிறது. இப்பொழுது அயல் நாட்டானும் ஆளவில்லை, அந்நியன் கொடியும் நமது

கோட்டை மதிற் சுவர்களில் பறக்கவில்லை. அப்படி யிருந்தும் ஏன் இன்று பஞ்சம். பஞ்சம் இந்தியாவில் இல்லை என்று எந்த காங்கிரஸ்காரராவது விரலை மடக்க முடியுமா? பட்டினியால் மக்கள் சாகிறார்கள் இன்றும் என்பதை இல்லையென்று எந்த மந்திரியாவது கூற முடியுமா?

வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் இவ்வளவு பஞ்ச மில்லையே. ஏதாவது வெள்ளைக்காரர்கள் காலத்தில் செலுத்தின வரிகளை இப்பொழுது இவர்கள் ஆட்சி யில் செலுத்தாமல் இருக்கிறோமா? அவன் காலத்தில் செலுத்தி வந்த அத்தனை வரிகளையும் அதற்கு மேலும் இப்பொழுதும் செலுத்திக்கொண்டு தான் வருகிறோம். நிலம் இருந்தால் நிலத்திற்கு வரி, வீடு இருந்தால் வீட்டுக்கு வரி, தொழில் இருந்தால் தொழில் வரி, வருமானத்துக்கு வரி, விற்பனைக்கு வரி, உபயோகிக் கும் தேயிலைக்கு வரி, குடிக்கும் காப்பிக்கு வரி, உபயோகிக்கும் ரப்பருக்கு வரி, போடும் புகையிலைக்கு வரி-முன்பிருந்த அவ்வளவு வரிகளையும் ஒன்று விடா மல் செலுத்துகிறோம். சர்க்காரும் வசூலிக்காமல் விடு வதில்லை. இருந்தும் அழிகிறோம் அரிசியில்லாமல், ஆடையில்லாமல். அதுதான் ஆச்சரியம். ஏன்? இந்தக் கேள்வியை மக்கள் சர்க்காரைப் பார்த்துக் கேட்க வேண்டும். பதில்கூற வேண்டியது நாமல்ல, சர்க்கார்!

வெள்ளையன் கொள்ளைக்காரன், வெள்ளையன் அந்நியன் மேலும் அவனது ஆட்சியில் பயங்கர உலகப் போர் நடந்தது. அப்படியிருந்தும் அந்த சூழ்நிலையில் அவனுக்கு மாத்திரம் எப்படி பஞ்சத்தைப்போக்க முடிந்தது? துணி வேண்டிய அளவுக்குக் கொடுத் தானே எப்படி முடிந்தது?

சென்ற யுத்தம் நடந்த காலத்தில் எந்த நேரத்திலும் ஆட்சி கவிழ்ந்து விடும் பட்டணம் பகைவர் வசமாகிவிடும் என்ற பயங்கர யுத்த பீதி நாட்டிலே இருந்தது ஆனல் பஞ்சமில்லை. அந்த நேரத்திலும் அந்நியர்களால் முடிந்தது இவர்களால் இப்பொழுது ஏன் முடியவில்லை? இதற்கு பதில் கூற வழியில்லை! திராவிட முன்னேற்றக் கழகத்தார் விஷயத்தைத் திரித்துக் கூறுகிருர்கள், இருக்கும் நிலைமைக்கு தப்பான விளக்கம் தருகிருர்கள். அவர்கள் மயக்க மொழியில் மக்கள் விழுந்து விடக்கூடாது என்று மாத்திரம் சொல்ல முடிகிறது!

காங்கிரஸ் சர்க்காரால் உணவுப் பஞ்சத்தை போக்க முடியவில்லை 16 அவுன்ஸ் அரிசி கொடுக்க முடியாது என்கிருர்கள் என்று சொன்னல் நீ கொடுப்பாயா 16 அவுன்ஸ் என்று நம்மைக் கேட்டால் அது அக்ரமமானது! நாம் ரோட்டில் போகிருேம் நம்மீது உராய்வது போல் ஒருவன் கார் ஓட்டுகிருன் என்று வைத்துக்கொள்வோம். நாம் கார் ஓட்டுகிறவனைப் பார்த்து "கொஞ்சம் பார்த்து ஓட்டப்பா" என்ருல் நல்லவனுயிருப்பவன் "சரி ஆகட்டும்" என்பான். அவசரமாக போகிறவனுயிருந்தால் பேசாமலே வேகமாகப்போய் விடுவான். கோணல் புத்தியுள்ளவன் தான் மோட்டாரை நிறுத்திக் காரை விட்டு இறங்கி நம்மை ஏற இறங்கப் பார்த்து "நீ ஓட்டுக் காரை" என்பான். அது மாதிரி சர்க்காரைப் பார்த்து "நீங்கள் சரியாக ஆளவில்லை, கொஞ்சம் அறிவுடன் நடந்து கொண்டிருந்தால் இந்த அரிசிப் பஞ்சம் இருக்குமா? என்று கேட்டால் "நீ தருகிருயா, ஆளுக்கு ஒரு மூட்டை" என்று நம்மை கேட்கிருர்களே நாம் அரிசி

கிடங்கு வைத்திருக்கிறோமா அல்லது நாம் நந்தனார் பரம்பரையா? இல்லை நடராச பெருமான் அருளால் ஒரே இரவில் 40 காணி நிலத்தையும் உழாமல் விதைக்காமல் அறுத்து அந்தணர் வீட்டில் கொண்டு போய் சேர்த்துவிட்டு 'ஐயே! மெத்த கடினம்' என்று பாடியது போல் பாட அல்லது நம் வீட்டைச் சுற்றியா அரிசி கேட்கும் ஜனங்கள் நிற்கிறார்கள்? நம்மிடமா அரிசி கடை சாவி யிருக்கிறது? நமக்கா வரி செலுத்துகிறார்கள். நம் கட்சியா ஆளுகிறது?

கச்சேரி நடக்கிறது. பாடகர் பாடுகிறார். ரசிகர்கள் சுருதி சரியாயில்லை, தாளத்துக்கு ஒத்துவரவில்லை என்றால் நல்ல வித்துவான் "அப்படியா! ரசிகர்கள் பார்த்து ரசிக்கிற அளவுக்கு என் பாட்டு அவ்வளவு மட்டமாக வா போய் விட்டது." என்று சுருதியை சரிப்படுத்திக் கொள்வார். "தம்பூரா இந்தா, நீ பாடு" என்று சொல்ல மாட்டார். வாழத் தெரியாத வித்துவான் தான் "என் சுருதி சரியாயில்லை, தாளத்துக்கு ஒத்துவரவில்லை என்று சொன்னாயே, இந்தா நீயே பாடு" என்று தம்பூராவை நம்மிடம் தருவார். இதைத்தான் இந்த சர்க்காரும், காங்கிரஸ் தலைவர்களும் செய்கிறார்கள்! அரிசி 16 அவுன்ஸ் தர முடியவில்லையே என்றால் "நீ தருகிறாயா 16 அவுன்ஸ் அரிசி" என்று திருப்பிக் கேட்கிறார்கள்.

நம்மை "16 அவுன்ஸ் அரிசி தருகிறாயா, இந்த உணவுப் பஞ்சத்தை போக்க முடியுமா, நூல் நெருக்கடியைத் தீர்க்க முடியுமா" என்று கேட்கிறார்களே, மக்களிடம் 'சுயராஜ்யம் வந்த'வுடன் நாட்டிலே தேனும் பாலும் ஓடும், தினைப்புனம் தெரியும், தினைப்

புனத்தில் ஆலோலம் பாடும் வள்ளியின் குரல் கேட்கும், வேலன் வருவான், நமது வேதனை தீரும், வறுமை, ஒழியும், வரி குறையும் என்று நாமா கூறினோம் ?

இன்னும் சில காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக்காரர்களிடமிருந்து காங்கிரஸ்காரர்களல்லவா நாட்டை மீட்டார்கள், அவர்களல்லவா நாட்டை ஆள தகுதியுடையவர்கள், இவர்கள் யார் நாட்டைப்பற்றி பேச என்று கேட்கிறார்கள். அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தைக் கட்டச் சொல்லி அதன் பொறுப்பை ஒரு கொத்தனாரிடம் கொடுத்தோம். நாம் சொன்னவாறே கொத்தனார் உண்மையுடன் திறமையாக, வகுப்பு அறைகள், விஞ்ஞான அறைகள், ஹாஸ்டல்கள், இசை மண்டபம், துணை வேந்தர் பங்களா, ஆசிரியர்கள் வசிக்குமிடம் எல்லாம் கட்டி விட்டார் என்று வைத்துக் கொள்வோம். நாம் அவருக்கு என்ன செய்வோம்? பல்கலைக் கழகம் ஆரம்பிக்கு முன் கொத்தனாரைக் கூப்பிடுவோம், மாலை மரியாதை செய்வோம், தாம்பூலம் தருவோம், விருந்து வைபவம் நடத்துவோம். இது தான் அவர்களுக்கு செய்ய வேண்டிய மரியாதை, முறை - இதை நாம் அவருக்கு செய்தால், கொத்தனார் இதெல்லாம் எனக்கு வேண்டாம் எனக்கு துணை வேந்தர் பதவி வேண்டும். நான் கட்டிய பல்கலைக் கழகத்திற்கு நான் தான் 'வைஸ் சான்சலராக' இருக்க வேண்டும் என்றால் யார் ஒத்துக் கொள்வார்கள்? கொத்தனாரின் போக்கை மக்கள் என்ன வென்று எண்ணுவார்கள். கட்டடம் கட்டியவன் தான் அதை ஆளும் கர்த்தாவுமாக வேண்டும்' என்று சட்டமில்லை. அதைப் போலவே நாட்டை மீட்டவர்கள் தான் அதை ஆளவும் வேண்டும் என்ற விதியில்லை.

சர்ச்சில் துரை சண்டைக் காலத்தில் இங்கிலாந்தை ஆபத்திலிருந்து காப்பாற்றினர். ஆனல் இப்பொழுது அவர் ஆளவில்லையே, அட்லி துரையல்லவா ஆள்கிறார். யுத்த காலத்தில் சர்ச்சில் தானே நமது நாட்டை ஆபத்திலிருந்து காப்பாற்றினர் ஆகவே அவரே தான் இப்பொழுதும் ஆள வேண்டும் என்று அந்த நாட்டு மக்கள் கூறவில்லை. யுத்த காலத்தில் யுத்தத்தையும் ஆபத்தையும் தடுக்க சர்ச்சில் - சாதாரண காலத்தில் சமாதானத்தையும் சமதர்மத்தையும் பரப்ப அட்லி கட்டடம் கட்ட கொத்தனர். அதை ஆள அதற்கு தகுதியான இன்னொருவர். தோட்ட வேலைக்கு தோட்டக்காரன் - வீட்டு வேலைக்கு வீட்டுக்காரி அந்தந்த வேலையோடு அவரவர்கள் நின்று விட வேண்டும்.

நாட்டை மீட்டிட நாங்கள் உதை பட்டோம், உடைமையை இழந்தோம், உயிரைக் கொடுத்தோம். உண்மை! ஆனல் இவர்கள் யாரைக் காட்டி யாருக்காக நாட்டை மீட்டார்கள்? இந்தியாவிலுள்ள முப்பத்து முக்கோடி ஜனங்களைக் காட்டியல்லவா வெள்ளைக்காரனிடமிருந்து நாட்டை மீட்டார்கள். அந்த முப்பத்து முக்கோடி ஜனங்களில் நம்மை சேர்த்து அல்லவோ! இவர்கள் சுதந்திரம் கேட்கும் பொழுது நம்மைத் தள்ளிவிட்டு தனியாகவா சுதந்திரம் கேட்டார்கள்? கேட்டிருக்க முடியாது. பிறகு ஏன் நமக்கு சுதந்திரத்தைத் தர, சுகத்தைத் தர மறுக்கிறார்கள்?

"நாங்கள் தான் சுதந்திரம் வாங்கினேம், நாங்கள் தான் சுதந்திரம் வாங்கினேம்." என்று காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி கூறுகிறார்களே இவர்கள் தான உல

கத்திலேயே சுதந்திரம் பெற்றார்கள் ? இவர்கள் பெற்ற இதே சுதந்திரத்தை பக்கத்திலுள்ள பர்மா பெற வில்லையா? பர்மாவும் பெற்றது. ஆனால் பர்மாவில் காந்தியாரில்லை. கைராட்டை இல்லை, சத்தியாக்கிரகம் நடக்கவில்லை, தண்டி யாத்திரையில்லை, சத்திய சோதனையில்லை, சிலோன் சுதந்திரம் பெற்றது அங்கே சத்தியாக்கிரகம் நடக்கவில்லை, இந்தோனேஷியா சுதந்திரம் பெற்றது அங்கே சத்தியாக்கிரகம் நடக்க வில்லை. பிலிப்பைன் சுதந்திரம் பெற்றது, அங்கே சத் தியாக்கிரகம் நடக்கவில்லை. இந்தியாவைப் போலவே சுதந்திரம் பெற்ற இந்த நான்கு நாடுகளிலும் காந்தியார் இல்லை, சத்தியாக்கிரகம் நடக்கவில்லை, இருந்தும் அந்த நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன. ஏன் இவர்கள் வாங்கிய அதே சுதந்திரத்தை ஜின்னா வாங்கவில்லையா? ஒரு நாள் 'லாக் அப்பில்' இல்லாமல், ஆடை மெருகு குறையாமல், எகிப்து நாட்டு சிகரட்டைத் துறக்காமல், ரோல்ஸ் ராய்ஸ்கார் சவாரியை விடாமல் ராஜதந்திரம் என்னும் ஒரே ஆயுதத்தைக் கொண்டே தனிநாடு பெற வில்லையா? ஆகவே நாட்டை அந்நியனிடமிருந்து வாங்குவது ஒரு பெரிய காரியம் அல்ல. அதிலுள்ள மக்களுக்கு வாழ வழி வகுப்பது தான் சிரமம். இனி இவர்கள் "நாங்கள் தான் சுதந்திரம் வாங்கினோம், ஆகவே நாங்கள் தான் ஆள்வோம்" என்று தம்பட்டம் அடிப்பதை நிறுத்தி விட்டு சுய ஆட்சியின் பலனை, சுதந்திரத்தின் பலனை, குடியரசின் பலனை, ஜனநாயகத் தின் பலனை மக்கள் அனுபவிக்க காங்கிரஸ் சர்க்கார் பாடுபட வேண்டும்.

காங்கிரஸ் சர்க்கார் ஆள்கிறது என்றால் மந்திரக் கோல் துணை கொண்டல்ல, மக்களிடம் மற்றக் கட்சி

களை விட அதிகமாக ஓட்டுப் பெற்றது - மக்கள் தந்த ஆதரவின் மேல் ஆள்கிறார்கள்! இப்பொழுது நடப்பது மக்களுக்காக, மக்களாலேயே, நடத்தப்படும் மக்களாட்சி. (Government of the People, By the people and For the people) பழைய மன்னர்கள் ஆட்சி உயர்ந்ததல்ல; மட்டமானது! நாடகத்திலே தர்பார் சீனில் அரசன் வந்ததும் மந்திரியைப் பார்த்து "மந்திரி! மாதம் மும்மாரி மழை பெய்கதா?" என்று கேட்பார். உடனே ஜனங்கள் "ஆகா! அது போலல்லவா ஆட்சி இருக்க வேண்டும். மன்னன் தர்பாருக்கு வந்தவுடன் யோக க்ஷேமத்தையும், ஊர் க்ஷேமத்தை விசாரிக்கிறார். நாட்டிலே மாதம் மும்மாரி மழை பெய்ததா என்று கேட்கிறார். ஆகா!! குடிகள் மேல் எவ்வளவு அன்பு" என்று பொதுமக்கள் கருதுவார்கள். அது தவறு. அரசன் தர்பாருக்கு வந்து மாதம் மும்மாரி மழை பெய்கிறதா என்று கேட்டால், மாதம் எத்தனை தடவை மழை பெய்தது என்பதைக் கூட மந்திரியைக் கேட்டே தெரிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு அவ்வளவு மந்தபுத்தி படைத்தவன் மன்னன் என்று அர்த்தம். நல்ல வேளையாக அந்த ஆட்சி இப்பொழுது நடக்கவில்லை. இப்பொழுது மக்களாட்சி நடக்கிறது.

மக்கள் ஆட்சியில் அரசாங்கம் தவறாக நடந்தால் மக்கள் தவறை எடுத்துக் காட்டலாம். தலைமுறை தலைமுறையாக அரசர்குலம் ஆளும் காலம் மாறி விட்டது. இப்பொழுது மந்திரி பதவி அந்தக் காலத்தில் இருந்தது போல சாசுவதமானதல்ல. மந்திரியாக மக்களில் யாரும் வரலாம். இப்பொழுது இருக்கிற மந்திரி நம்மில் ஒருவர். நம்மால் அனுப்பப்பட்டவர். சாதாரண

மானவர்கள் தான் மந்திரிமார்களாக இருக்கிறார்கள். இன்று மந்திரி மார்களாயிருப்பவர்கள் நாளை விலாசம் தெரியாமல் போய் விடுபவர்கள் தான். தோழர் அவி நாசிலிங்கத்தைப் பாருங்கள். அவர் மந்திரியாக இருந்த போது இங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்திருந்தார். இப்பொழுது எங்கெங்கு தேடினாலும் அகப்பட மாட் டார் போலிருக்கிறது. ஒருவன் இன்று இரவு நாடகத் தில் கோவலன் வேஷம் போட்டுக் கொண்டால் மறு நாள் மாதவி வீடா கிடைக்கும். எங்காவது கொட்ட கையின் மூலையில் ஓர் இடத்தில் தூங்கிக் கொண்டி ருப்பான்!!

காங்கிரஸ் மந்திரிமார்கள் தங்கள் பதவி சாசுவத மானது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மந்திரி பதவி சாசுவதமானதல்ல. மக்கள் மந்திரிகளை விட மதிப்பு வாய்ந்தவர்கள். மக்கள் மந்திரிகளை உண் டாக்கும் மன்னர்கள். மக்கள் மந்திரிகளுக்கு பயப்பட வேண்டியதில்லை. ஆட்சியில் மாசு ஏற்பட்டால் மந்திரி மார்களை மாற்றும் பொறுப்பு மக்களுடையது. மந்திரி மார்களை மாற்றும் போது மக்கள் திறமையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தவே நாம் பாடுபடுகிறோம். விளக்குக்கு பிரகாசமாக எரிய தூண்டுகோல் பயன்படுவது போல!

அப்படியானால் இப்பொழுதுள்ள மந்திரி சபையை மாற்றிவிட்டு வேறு மந்திரி சபை அமைத்து விட்டால் நமது அல்லல்களெல்லாம் தீர்ந்துவிடுமா என்று கேட்டால் தீராது தான்! நாம் இந்த மாகா ணத்தில் இரண்டு மூன்று தடவை மந்திரி சபை மாறி யதைப் பார்த்திருக்கிறோம். முதலில் பிரகாசம் பிரதமராக வந்தார். பத்திரிகைகளெல்லாம் 'பிர

காசம் வருகிறார். பிரகாசம் ஆட்சியில் மக்கள் வாழ்வு பிரகாசமாக இருக்கும்" என்று எழுதின. ஒரு வருஷத்தில் பிரகாசம் இருட்டாகிவிட்டது! பிரகாசம் ஆட்சி போய் ஓமந்தூரார் வந்தார். "ஓமந்தூரார் உத்தமர் சத்தியவந்தர், சதா கடவுள் சிந்தனை உடையவர், கார்த்திகை விரதம் இருப்பவர், ரமணரிஷி பக்தர், அவர் காலத்தில் ஆட்சி அருமையாக இருக்கும்" என்று பத்திரிகைகள் எழுதின. அதை மக்களும் நம்பினார்கள் - $1\frac{1}{2}$ ஆண்டு கழிந்தது. ஓமந்தூரார் போய் குமாரசாமி ராஜா வந்தார். இப்பொழுது ஆட்சி செய்வது அவருடைய மந்திரிசபை தான், இப்படி இரண்டு மூன்று தடவை மந்திரி சபை மாறியது ஆனால் பஞ்ச நிலைமை மாறவில்லை. பதினாறு அவுன்சு பன்னிரண்டாகி பன்னிரண்டு பத்தாகி, பத்து எட்டாகி, எட்டு ஏழாகியிருக்கிறது. மந்திரி சபை மாற மாற அரிசி அளவு அதிகமாக வில்லை, குறைந்துகொண்டு வருகிறது. ஏன்? மந்திரி சபை மாறினால் மாத்திரம் போதாது. மந்திரிகள் மனம் மாறவேண்டும். மந்திரிமார்களின் கொள்கைகள் மாறவேண்டும் மந்திரிமார்களின் திட்டம் மாற வேண்டும். சுருங்கச் சொன்னால் ஆட்சி முறையே மாறவேண்டும்.

செட்டியார் கடையில் ஐந்து பலம் சர்க்கரை வாங்கி வந்து வீட்டில் நிறுத்துப் பார்த்தவுடன் அது மூன்று பலமாக இருந்தால் செட்டியார் கடையிலுள்ள பையன் சரியாக நிறுத்துத்தரவில்லை, போக்கிரிப் பயல் அவனை உதைக்கவேண்டும் என்று முதலில் செட்டியார் கடையிலுள்ள பையன் மீதே நமக்குக் கோபம் வரும். ஆனால் செட்டியாரே நேரே நிறுத்

துக்கொடுத்த பிறகும் வீட்டிற்குப் போய் நிறுத்துப் பார்த்தால் அதே 3 பலம் இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? தராசு சரியில்லை என்று அர்த்த மல்லவா? அதைப் போலவே நாட்டிலே மக்கள் வாழ்வு நலிகிறது என்றவுடன், ஆள்கிறவன் வெள்ளைக்காரன், அவன் அந்நியன் இந்த நாட்டானல்ல, அதனால் தான். இந்த கஷ்டமெல்லாம் என்று முதலில் செட்டியார் கடையிலுள்ள செட்டிப் பையன்மேல் கோபப்பட்டதுபோல் மக்கள் வெள்ளைக்காரர்கள் மீது கோபப்பட்டார்கள். பிறகு காங்கிரஸ் தலைவர்கள் அந்நியர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினார்கள். நமது சர்க்கார் வந்தது. நமது மந்திரிகள் ஆள ஆரம்பித்தார்கள் இப்பொழுதும் நமது வாழ்வு நலிவது நிற்க வில்லை, என்றால் என்ன அர்த்தம்? ஆட்சி செய்யும் முறை சரியில்லை என்று பொருள். தராசை சரிப்படுத்தாமல் எப்படி செட்டியார் கடை பையன் நிறுத்தாலும், செட்டியாரே நிறுத்தாலும், ஐந்து பலத்திற்கு மூன்று பலம் தான் நின்றதோ அதே போல் ஆட்சி முறையை மாற்றிக்கொள்ளாமல், வெள்ளைக்காரர்கள் ஆண்டாலும், காங்கிரஸ்காரர்கள் ஆண்டாலும் நமது வாழ்வு நலிவது நம்மை விட்டு நீங்காது. ஐந்து பலம் ஐந்து பலமாகவே இருக்கவேண்டுமானால் தராசையே மாற்றியமைக்க வேண்டும். தராசை மாற்றாமல் செட்டியார் கடைப் பையன் ஸ்தானத்தில் யார் உட்கார்ந்தாலும் செட்டியார் உட்கார்ந்தாலும் நாயுடு உட்கார்ந்தாலும், பிள்ளை உட்கார்ந்தாலும் அதே 'கதை' தான் நடக்கும். ஆகவே தராசைப் பிடுங்கிவிட்டு செட்டிப் பையன் உட்காரும் இடத்தில் உட்காருவதுபோல், காங்கிரஸ்

மந்திரிகளை தள்ளிவிட்டு அவர்கள் ஸ்தானத்தைக் கைப்பற்றுவதல்ல நோக்கம்.

மந்திரி பதவி நமக்கு வேண்டாம். நாங்கள் பார்க்கிறோமே அவர்கள் படும்பாட்டை. நமது ஆசையெல்லாம் தராசை மாற்றவேண்டும். ஒரு வீசைக்கு 40 பலம் என்று தெரிவதற்கு முன் செய்யப்பட்ட. தராசை தூர வீசி எறிந்துவிட்டு, வேறு தராசு செய்வதுபோல் ஏகாதிபத்தியம் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி முறையையே மாற்றியமைக்கவேண்டும். நாம் வேண்டுவது புது ஆள் அல்ல, புது மந்திரி சபை அல்ல புது ஆட்சி முறை. இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூறுகிறார்கள். சுருக்கமாக "திராவிட நாடு திராவிடருக்கே!" என்று கூறுவதன் பொருள் அதுதான். அதை மக்கள் புரிந்துகொண்டார்கள். அதனால், தான் அதைக் கேட்கும் பொழுது மகிழ்ச்சி அடைகிறார்கள்.

ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் "திராவிடநாடு திராவிடருக்கே" என்பதைக் காட்டுக் கூச்சல் என்கிறார்கள். யாருக்கு நாங்கள் சொல்லுவது காட்டுக் கூச்சலாகத்தோன்றும். நாம் பேசும் பேச்சை நான்கு தெருக்களுக்கு அப்பால் இருந்து கேட்ட ஒருவரை மற்றொருவர் "திராவிட இயக்ககூட்டம் நடந்ததாமே - அதில் என்ன பேசினர்?" என்று கேட்டால் "என்ன பேசினர் ஒரே சத்தமாகக் கேட்டது" என்று கூறுவார். அதே போல் நாம் கூறும் கொள்கைகளை கேட்காமலேயே "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது வெறும் காட்டுகூச்சல் என்று

சர்க்கார் மந்திரிகள் கூறுகிறார்கள். கூறுகிறவர்கள் நேரே வந்து "திராவிடநாடு திராவிடருக்கே" என்கிறாயே அது என்னப்பா என்று நம்மை வந்து கேட்க வேண்டாமா? ஓ! அவர்கள் 'கனம்'—வர மாட்டார்கள் - கூப்பிடட்டும் நாம் போவோம் - போய் நம் கொள்கைகளைக் கூறுவோம்.

திராவிட நாட்டுக் கோரிக்கை வெறும் காட்டுக் கூச்சல் என்பதோடாவது மந்திரிகள் விட்டார்கள் - காமராஜர் இன்னும் ஒரு படி அதிகமாக போய் "அது எனக்குப் புரியவே இல்லை" என்கிறார் ஏதோ உலகத்திலே எல்லாம் புரிந்துவிட்டது மாதிரியும் திராவிடநாட்டுக் கோரிக்கை ஒன்றுதான் புரியாதது போலவும் பேசுகிறார்.

இன்னும் சில காங்கிரஸ்காரர்கள் "இவர்கள் "திராவிட நாடு" "திராவிட நாடு" என்கிறார்களே யார் தரப்போகிறார்கள்—நாங்கள் தரமாட்டோம்" என்கிறார்கள். புரியாத ஒன்றை எப்படி தரமுடியாது என்று சொல்ல முடியும் என்பது நமக்கு தெரியவில்லை. இவர்களை யார் திராவிட நாடு தா என்று கேட்கிறார்கள்? இவர்கள் இனியாவது இதுமாதிரி சொல்வதை நிறுத்திவிடவேண்டும். நாம் இவர்களைப் பார்த்துக் கேட்கவில்லை. நாம் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்கிறோம். இல்லாதவரைப் பார்த்து கொடு என்று கேட்போமா? எங்களுக்குத் தெரியும் இவர்களிடம் அந்த அதிகாரமில்லை என்பது!

சோடா கடையில் போய் சுக்கா கேட்போம். காப்பி கடையில் போய் 'செண்டா' கேட்போம்,

'செண்ட்' கடையில் போய் தேயிலையா கேட்போம். எது எது யார் யாரிடமிருக்குமோ அதைத் தானே கேட்போம். நமக்குத் தெரியும் இவர்களுக்கு அதிகாரமில்லை யென்று. ஆகவே தான் நாம டில்லியைப் பார்த்து, வடநாட்டு தலைவர்களைப் பார்த்து, மத்திய பார்லிமெண்டைப் பார்த்து கேட்கிறோம். மாகாண சர்க்காரைக் கேட்கவில்லை. மந்திரி மாதவ மேனனையும், மந்திரி பக்தவத்சலத்தையும் பார்த்து கேட்கவில்லை. இவர்களிடம் இருந்தால் இவ்வளவு நாள் கேட்டுக்கொண்டா இருப்போம் - தட்டி எடுத்துக் கொண்டிருப்போம்!

நாங்கள் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்கிறோம் இவர்கள் ஏன் "இல்லை" "இல்லை" என்று நடுவில் குறுக்கிடவேண்டும். அது நல்லதை ஒருவர் நாடி பிறரிடம் வேண்டிக்கொண்டிருக்கும்போது அதிலே வேறொருவர் குறுக்கிடுவது என்பது இந்த நாட்டு பரம்பரைப் பழக்கமாகிவிட்டது. கோயிலுக்கு போய் ஒருவர் ஆண்டவனைப் பார்த்து "ஐயனே! நான் சித்திரை மாதம் சிறப்பாக அபிஷேகம் செய்கிறேன்; வைகாசி மாதம் காப்புக் கட்டுகிறேன். ஆனி மாதம் உற்சவம் செய்கிறேன் என்னை நன்றாக, வை" என்று வணங்கப்போனால் அவரை வணங்க விடுவதில்லை - இடையிலே பூசாரி தோன்றுவார் "ஓ! அம்பலவாண முதலியாரா, அர்ச்சனை செய்ய வேண்டுமா, எடு ஆறணாவை" என்பார். அதேபோல் "திராவிட நாடு" தரும்படி கோருவது டில்லி தேவதையைப் பார்த்து! வரம் தரும்படி கோரும்போது தான் காமராஜர் போன்ற பூசாரிகள் குறுக்கிடுகிறார்கள்: நாம் வரம் கோரும் டில்லி தேவதை வேண்டு

மானல், நம்மைப் பார்த்து, "நீ கோரும் வரம் தர முடியாது" என்று கூறட்டும். முடியுமானால் இவர்கள் டில்லியைப் பார்த்து திராவிட நாடு கொடுக்காதே என்று கூறட்டும். அதை விட்டு விட்டு ஏன் திராவிட நாடு இல்லை இல்லையென்று வெறும் கூச்சல் போடவேண்டும்.

எதை இவர்கள் 'இந்தா' என்று கொடுத்தார்கள்? பாகிஸ்தானை கொடுப்பதற்கு முதல் வினாடி வரையிலே பாகிஸ்தான், பாரதமாதாவை துண்டு போடக்கூடாது என்று கூறி வந்தவர்கள் தானே இவர்கள். பாகிஸ்தான் கேட்ட போதாவது காங்கிரஸ் தலைவர்கள் முதற் கொண்டு சாதாரண தொண்டர் வரையிலே முஸ்லீம்கள் இந்த நாட்டுப்பரம்பறை குடிகள் அல்ல, அவர்களுக்கு தனி நாடு கொடுத்தால் பாதகம் விளைவிக்கும் என்ற காரணத்தையாவது காட்டினார்கள். நாம் கேட்கும் திராவிட நாட்டுக்கு முடியாது என்பதற்கு இது வரை என்ன காரணம் காட்டினார்கள்? இதுவரை எந்த காங்கிரஸ் தலைவராவது, காங்கிரஸ் தொண்டராவது திராவிட நாடு வட நாட்டாருடன் சேர்ந்திருந்தால் தான் வாழமுடியும், அதற்கு இன்னின்ன காரணங்கள் என்று எடுத்துக்காட்டியிருந்தால் இவர்கள் திராவிட நாடு இல்லை' என்று சொல்லுவதிலே விவேகம் இல்லாவிட்டாலும் வீரமாவது இருக்கிறது என்று ஒத்துக் கொள்ளலாம்.

திராவிட நாடு கூடாது அது தீங்கு விளைவிக்கும் என்று சொன்னால் எப்படி அறிவுள்ளவர்கள், ஆண்மையுள்ளவர்கள் ஒத்துக்கொள்ள முடியும்? வேற்று நாட்டார் என்று கூறிய முஸ்லீம்களுக்கு தனி நாடு

இந்தியாவில் சுமார் மூன்றில் ஒரு பங்கை கொடுத்து விட்டு சொந்த நாட்டவராகிய நமக்கு மாத்திரம் இல்லை என்றால் இதை உலகம் எள்ளி நகையா டாதா? கோரி பரம்பரை, கஜினி பரம்பரை என்று சொன்ன முஸ்லிம்களுக்கு கொடுத்தவர்கள் சேர, சந்ததியினருக்கு சோழ வம்சத்தாருக்கு, பாண்டியன் பரம்பரைக்கு இல்லை என்றால் இளம் வாலிபர்கள் இதை ஒத்துக்கொள்வார்களா? சொந்த நாடு இல்லாதவர்களுக்கு இந்தியாவில் இடம் கொடுத்திருக்கிறார்கள். தங்கம் விளையும் பூமியை தாயகமாக உடையவர்களுக்கு இல்லை என்கிறார்கள். உலகத்தில் நல்லெண்ணம் உள்ள நாடுகள் ஒத்துக்கொள்ளுமா?

இன்னும் சில விசித்திர சித்தர்கள், ஆந்திரத்தில் இவர்கள் கழகம் இல்லை, கன்னடத்தில் இவர்கள் கழகம் இல்லை கேரளத்தில் இவர்கள் கழகம் இல்லை, இவர்கள் திராவிட நாட்டுக் கொள்கைகளை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா, இவர்களாக கத்துகிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆந்திரத்தில், கன்னடத்தில் கேரளத்தில் நமது கழகம் இல்லை. அங்கெல்லாம் பிரசாரம் இல்லாத காரணத்தால் பிரசாரம் செய்வதற்கு நேரமில்லை, வசதியில்லை. இனி பிரச்சாரம் செய்ய வேண்டும்.

ஆனால் அங்கெல்லாம் பிரச்சாரம் செய்யவில்லை என்பதற்காக அவர்கள் வாழுமிடத்தையும் சேர்த்து திராவிட நாடு கேட்கக் கூடாது என்று விதியில்லை. ஆந்திரத்திலும், கன்னடத்திலும் கேரளத்திலும் நமது கொள்கைகளை பிரச்சாரம் செய்து அவர்கள் ஒப்புதலை வாங்கிய பிறகு தான் திராவிட நாடு

கேட்கவேண்டும் என்று அவசியமுமில்லை. பாகிஸ்தான் வருவதற்கு முன் இப்பொழுது இந்தியாவின் வடமேற்கிலும் வடகிழக்கிலுமுள்ள பாகிஸ்தான் பகுதிகளில் மாத்திரம் பிரச்சாரம் செய்து அவர்கள் ஒப்பத்தைப் பெற்ற பிறகுதான் முஸ்லீம்கள் பாகிஸ்தான் கேட்க ஆரம்பித்தார்களா? பாகிஸ்தானின் சிருஷ்டி கர்த்தாவான ஜின்னு பிறந்தது பாகிஸ்தானில் அல்ல, பாகிஸ்தானில் சேராத பம்பாய் மாகாணத்தில்! பாகிஸ்தானைப்பற்றி பிரச்சாரம் செய்யும் சங்கமே பம்பாயில் தான் இருந்தது. பாகிஸ்தானின் பிரதமர் லியாகத் அலிகான் ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவர் அவர் ஐக்கிய மாகாணத்தில் பாகிஸ்தானின் தேவையைப் பற்றி பிரச்சாரம் செய்தார் லியாகத் அலியைப் பார்த்து "நீ ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவர் நீ கேட்கும் பாகிஸ்தான் வடமேற்கிலுள்ள பஞ்சாபிலும் சிந்துவிலும் இருக்கிறது அங்கு போய் பிரச்சாரம் செய்— ஐக்கிய மாகாணத்தில் பிரச்சாரம் செய்யாதே" என்று யாரும் கூறவில்லை. பாகிஸ்தானைப் பற்றி பம்பாயிலும் ஐக்கிய மாகாணத்திலும் ஜின்னுவும் லியாகத் அலியும் பிரச்சாரம் செய்தபோது இப்பொழுது பாகிஸ்தானின் பகுதிகளாக இருக்கும் வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், சிந்து, வங்காளம் ஆகிய மாகாணங்களிலுள்ள மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பாகிஸ்தான் தான் வேண்டும் என்று கூட்டறிக்கை விடவில்லை. அப்பொழுது எல்லைப்புற மாகாணத்திற்கு பிரதமராயிருந்த கான் அப்துல் கபார்கான் பாகிஸ்தான் கூடாது என்றார். சிந்து மாகாணத்து பிரதமர் அல்லா பக்ஷ் பாகிஸ்தான் கூடாது என்றார். பஞ்சாப் மாகாணத்தில் பிரதமராயிருந்த சர் ஹயத்கானும் பாகிஸ்தான்

வேண்டாமென்று சொன்னார். வங்காளத்துக்கு பிரதமராயிருந்த பஸ்லுல் ஹக் ஜின்னாவிடம் விருப்பம் ஏற்பட்ட நேரத்தில் வேண்டும் என்பார். வெறுப்பு ஏற்பட்ட நேரத்தில் கூடாது என்பார். இப்படி இப்பொழுது பாகிஸ்தான் பகுதிகளாக விளங்கும் பல பாகங்களிலிருந்தும் பாகிஸ்தான் வேண்டுமென்று ஜின்னா சொன்னபோது முதலில் எதிர்ப்புதான் வந்தது, பூரண ஆதரவு வரவில்லை. கடைசியில் பாகிஸ்தான் கிடைக்காமலா போய்விட்டது? அதேபோல் திராவிட நாடு கிடைப்பதற்கு எடுத்தவுடனேயே எல்லாவிடத்திலிருந்தும் ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. காங்கிரஸ்காரர்கள் ஆந்திரர்களும், கன்னடியர்களும், கேரளத்தவர்களும் இவர்களிடம் திராவிட நாடு வேண்டும் என்று சொன்னார்களா என்று கேட்கிறார்களே, இவர்களிடம் அவர்கள் எப்போதாவது திராவிடநாடு வேண்டாம் என்று சொல்லிக்கொண்டார்களா? ஏன் வீண் விவாதத்தைக் கிளப்புகிறீர்கள்.

பாகிஸ்தான் பாதகஸ்தான் என்றார்கள். முஸ்லீம்கள் பிற இனம் என்றார்கள், கோரி பரம்பரை என்றார்கள், சரித்திரப்படி சாத்தியமில்லாத காரியத்தை கேட்கிறார்கள் என்றார்கள், மறுபடியும் மொகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பார்க்கிறார்கள் என்றார்கள், முஸ்லீம்கள் மத வெறியர்கள் என்றார்கள், ஆனால் இன்று....? பாகிஸ்தான் பிரதிநிதியும் இந்தியாவின் பிரதிநிதியும் கராச்சியில் உறவு மாநாடு கூட்டுகிறார்கள். எவர்களை விரோதி யென்று கருதினார்களோ, எவர்களை தேசத்துரோகி என்று சொன்னார்களோ, எவர்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்ற முடி

வுக்கு வந்தீர்களோ அவர்களுடன் இப்பொழுது கை குலுக்கிக்கொள்கிறீர்கள்.

முஸ்லிம்கள் கைபர் கணவாய் வழியாய் வந்தவர்கள் சும்மா வரவில்லை குதிரையில் வந்தவர்கள், நம்மை ஆட்டிப் படைத்தவர்கள், நமக்கு அநியாயம் புரிந்தவர்கள் என்றார்கள். அவர்களுக்கு அளந்து கொடுத்தார்கள் கிழக்கிலும் மேற்கிலும் நாங்கள் இந்த நாட்டவர் எங்களுக்கு ஒரு தனி இடம் கொடு என்றால் தூற்றுகிறார்கள். ஜின்னாவை இராட்சதன் என்றார்கள். அந்த 'இராட்சத'க் கூட்டமும் இந்தியாவின் 'தேவர்கள்' கூட்டமும் இன்று காராச்சியில் கூடி யிருக்கிறார்களே அமிர்த கலசத்தை பருகுவது போல! அது எப்படி முடிந்தது. லியாகத் டெல்லிக்கு வந்தார். இந்தியாவின் ஜனாதிபதி விருந்து வைத்தார். நேரு கராச்சி சென்றார். பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் விருந்து வைத்தார்.

பாக்கிஸ்தான் பிரதமர் லியாகத் அலியும், இந்தியாவின் பிரதமர் பண்டித நேருவும் ஒருவருடன் ஒருவர் கைகுலுக்கிக் கொள்கிறார்கள். அது எப்படி முடிந்தது? 'இது முடியாது, நடக்காது' என்று பாகிஸ்தான் கொடுப்பதற்கு முதல் வினாடிவரையிலே சொன்னார்களே அதை ஞாபகப்படுத்திக் கொள்ளட்டும்.

இந்தியாவின் வட மேற்கிலும், வட கிழக்கிலும் இரு வேறு முனைகளிலும் பாகிஸ்தான். இடையே இந்துஸ்தான். மாளிகையின் முன்புறமும் பின் புறமும் பாகிஸ்தான் நடுவே கூடம் இருப்பது போல இந்துஸ்தான் இருக்கிறது. இந்த கூடம் எந்த நேரத்திலும்

களமாகலாம். அந்த அளவுக்கு போர் புகை இரண்டு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இருந்தும் பாகிஸ்தான் தந்தார்கள். நாங்கள் கேட்கும் திராவிட நாட்டில் நடுவே கூடம் எதுவுமில்லை. இப்பொழுதுள்ள சென்னை மாகாணத்தையே திராவிடநாடு என்று அழைக்கிறோம். அதையே தரும்படி கேட்கிறோம்.

திராவிட நாட்டுக்கு மூன்று பக்கமும் கடல், மூன்று பக்கமும் மலைகள். கிழக்கே கிழக்கு தொடர்ச்சி மலை, மேற்கே மேற்கு தொடர்ச்சிமலை, வடக்கே உயர்ந்த விந்தியமலை. இயற்கை அரண் உடைய நாடு, 5½ கோடி மக்களையுடைய நாடு கடல் கடந்து வெளி நாட்டிற்கு சென்ற தோழர்களை தேடி அழைத்து வந்தாலும் தங்க இடம்தரும் நாடு. இங்கு நஞ்சைகளைப் பார்க்கலாம், புஞ்சைகளைப் பார்க்கலாம் கோலாரிலே தங்கம், சேலத்திலே இரும்பு, யுரேனியம் திருவிதாங்கூரிலே, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை காடுகள் காட்டிலே, அகில், தேக்கு காட்டுக்குப் பக்கத்திலே சாலைகளைப் பார்க்கலாம், சாலைகளுக்கும் பக்கத்திலே சிந்து பாடும் சிற்றாறுகளைக் காணலாம். உழைப்பாளிகளைப் பார்க்கலாம் சேரர்கள் ஆண்ட இடத்தைப் பார்க்கலாம், சோழர்கள் ஆண்ட இடத்தைப் பார்க்கலாம் பாண்டியர்கள் பரிபாலனம் செய்த இடத்தைப் பார்க்கலாம். சிலப்பதிகாரத்தைப் படிக்கலாம் மணிமேகலையைப் படிக்கலாம். 5½ கோடி மக்கள் வாழ வளமான திருவிடம். இதை தாருங்கள் என்கிறோம் 'தரமாட்டேன்' என்கிறார்கள். பாக்கிஸ்தான் தந்த அதே கையால் திராவிடநாடு தரமாட்டேன் என்கிறார்கள். அறிவுள்ள உலகம் இதை ஒத்துக் கொள்ளுமா?

டில்லியுடன் சேர்ந்திருப்பதால் இன்னின்ன லாபம் என்று எடுத்துக்காட்டத்தான் முடியுமா? கூட்டத்தில் நடுவிலே எழுந்திருந்து 'நாங்களெல்லாம் தரையில் கீழே உட்கார்ந்திருக்கிறோம் நீ மாத்திரம் ஏன் மேடைமீது நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாய்' என்று ஒரு விதண்டாவாதக்காரர் கேட்டால் 'உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் அதற்காகத்தான் மேடை மீது இருக்கிறேன்' என்று தானே பதில் கூற வேண்டும்.' மேலே இருப்பதால் தான் மக்களை எல்லாம் பார்க்க முடிகிறது. அது மேடையிருப்பதால் அடையும் லாபம் அதுபோல் திராவிடநாடு வடநாட்டுடன் சேர்ந்திருப்பதால் என்ன லாபம்? வடநாட்டுடன் சேர்ந்திருப்பதால் தான் அரிசிப் பஞ்சமில்லை, துணிப் பஞ்சம் இல்லை, நாலு பக்கங்களிலும் தொழிற்சாலைகள் வளர்ச்சி யடைந்திருக்கின்றன' என்று சொல்ல முடியுமா? அல்லது வடநாடு அதிக பலம் பொருந்தியது அங்குள்ள வீராதி வீரர்களுடன் நாம் சேர்ந்திருப்பதால் தான் நமக்கு வீரம் வருகிறது என்று சொல்ல முடியுமா? வடநாட்டுடன் நாம் சேர்ந்திருப்பதால் இன்ன லாபம் என்று காட்ட முடியுமா? முடியாது. காரணம் காங்கிரஸ்காரர்களுக்கு திறமையில்லாததால் அல்ல, அங்கு சட்டியிலே இல்லை! ஆகவே அகப்பையிலும் இல்லை!! சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!

வடநாட்டவர்கள் வீராதி வீரர்கள் என்றால் அதை மாணவர்கள் ஒத்துக் கொள்வார்களா? அவர்கள் பக்கம் பக்கமாகப் படிக்கிறார்களே அவர்களுக்கும் அந்நியர்களுக்கும் நடந்த சண்டைகளில் வெற்றி பெற்ற

தையா படிக்கிறார்கள்? வீழ்ந்த கதையை அல்லவா படிக்கிறார்கள். செங்கிஸ்கான் படையெடுத்தார் தோற்றார்கள், கோரி படை யெடுத்தான், தோற்றார்கள், கஜினி படை யெடுத்தான், தோற்றார்கள் பாபர் படை யெடுத்தான், தோற்றார்கள்; ஹுமாயூன் வந்தான் பட்டம் சூட்டினார்கள். இப்படியல்லவா அவர்கள் ஒவ்வொரு சண்டையிலும் தோற்ற கதையை சரித்திரம் கூறுகிறது. அப்படியல்ல திராவிடநாட்டு சரித்திரம், திராவிட நாடு வீழ்ந்த கதையையா கூறுகிறது? வடநாடு எந்த சண்டையிலும் வெற்றி பெற்றதாக சரித்திரம் காட்ட முடியாது ஏராளமாகக் காட்ட முடியும், திராவிடர்கள் வெற்றி பெற்ற சம்பவங்களை சரித்திரத்திலே. சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று கனக விஜயரைத் தோற்கடித்து அவர்கள் தலையில் கல்லை ஏற்றினான். இமயத்தில் தமிழர்கள் கொடியை பொறித்தான். ராஜ ராஜேந்திரன் பர்மாவை வென்றான். வெற்றிக் கறிகுறியாக ஸ்தூபம் நாட்டினான். குலோத்துங்கன் கலிங்கத்தின் மீது படையெடுத்து கலிங்கப் போரில் வெற்றி பெற்றான் கலிங்கத்துப் பரணி பாடியிருக்கிறார்கள். வெற்றி வரலாறு நம்முடையது. வீழ்ந்த கதை அவர்களுடையது. இப்படி ஒவ்வொரு சண்டையிலும் தோல்வியடைந்த தோல்வி பரம்பரையினரிடம் வெற்றி வீரர்கள் தங்கள் நாட்டை ஒப்படைத்து விட்டு இருக்க வேண்டுமா? அவர்கள் பாதுகாப்பில் நமக்கு ஆபத்து வராது என்று நாம் எப்படி நம்ப முடியும்?

அல்லது அப்பொழுது வீரம் இல்லை இப்பொழுது வடநாட்டாருக்கு வீரம் இருக்கிறது என்றாவது கூற

முடியுமா? அவர்கள் வீரம் தான் தெரிகிறதே? 3 வருடங்களாக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து காஷ்மீரில் போராட்டம் நடத்தி கடைசியாக சர்க்கார் சண்டையைப் பற்றி அறிக்கை விடுகையில் காஷ்மீரில் ஒரு பகுதி எதிரிகள் வசம் இருக்கிறது. மற்றொரு பகுதி தான் அப்துல்லா கையில் இருக்கிறது என்கிறார்களே அது இன்றும் வடநாட்டார்கள் சண்டையில் தோல்வியடைவதைத் தானே காட்டுகிறது. மூன்றாண்டுகள் போர் புரிந்தும் எப்படி காஷ்மீரின் ஒரு பகுதி இன்னும் எதிரிகள் வசம் இருக்கிறது என்று கேட்டால் பாதுகாப்பு இலாக்கா இந்தியத் துருப்புகள் இந்தப் பக்கமாக முன்னேறிக் கொண்டிருக்கும் போது அந்தப் பக்கமாக பாக். துருப்புகள் மள மள வென வந்து விடுகின்றன என்று கூறுகிறது அந்த பாதுகாப்பு இலாக்காவுக்கு பலதேவ்சிங் மந்திரி. காஷ்மீரைப் பற்றி பலதேவ்சிங் டில்லியில் ஒருதடவை பேசும் போது குறிப்பட்டார். We will send our Land Force, Air Force and Navy to Kashmir. அதாவது காஷ்மீருக்கு நாம் தரைப்படை விமானப்படை, கப்பற் படை ஆகிய மூன்றையும் அனுப்புவோம் என்பதாக! காஷ்மீருக்கு கப்பற் படையை அனுப்பப் போகிறாராம்!! காஷ்மீர் சண்டைக்கு கப்பல் படையை அனுப்பலாம் என்று கூறும் புத்திசாலி பாதுகாப்பு மந்திரியாக இருக்கும் டில்லி சர்க்காரிடம் நாம் திராவிட நாட்டை விட்டு வைக்கலாமா?

வரலாறு, வல்லமை, வளமை, இல்லாத நாட்டவரிடம், வரலாறு, வல்லமை வளமை உள்ள நாட்டார்

ஏன் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும்? அதற்கு வழி சொல்ல முடியவில்லை நம்மைத் தூற்றுகிறார்கள். தூற்றல் பாணம் நம் நம்பிக்கையை துளைத்துவிட முடியாது. நாங்கள் தூற்றலிலேயே முளைத்தவர்கள். ஆரம்பத்தில் நாங்கள் பேசியதற்கு பரிசா பெற்றோம்? வீட்டிலே தாய் தந்தையர்கள் கோபப்பட்டார்கள், தெருவிலே போகும் போது பெரியதனக்காரர்கள் திட்டினார்கள். வைதீகர்கள் சீறினார்கள். நாங்கள் தூற்றலுக்கு அஞ்ச மாட்டோம். ஆகவே எங்களைத் துளைக்க இனி நீங்கள் விடவேண்டியது தூற்றல் பாணம் அல்ல—அறிவு பாணம்!

இனி நமது கோரிக்கையை டில்லி சர்க்கார் நன்றாய் அலசிப் பார்க்கவேண்டும். டில்லி சர்க்கார் நமது கோரிக்கையை ஒப்புக்கொள்ள வேண்டும். இது பற்றி மத்திய சர்க்கார் மந்திரிமார்களுடைய மனம் மாறவேண்டும். விரைவில் நமக்கு நல்லாட்சிதர முன் வரவேண்டும்.

மக்கள் தரும் பலம் நமக்கு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. நமது திராவிட நாடு திராவிடருக்கே என்னும் மூலாதார முழக்கம் மூலை முடுக்குகளிலெல்லாம் கேட்கிறது. நம் கொள்கைகள் நன்றாய் வேரூன்றி விட்டன. இனி வெகு நாள் நம் இலட்சியத்தை அலட்சியம் செய்ய முடியாது. நமது குறிக்கோளை முறியடிக்க முடியாது. இனி திராவிட நாட்டுப் பிரச்சினையை தெரியவில்லை, புரியவில்லை என்று சொல்லாதீர்கள். தெளிவு பெறு

வதற்கு திராவிட நாடு பற்றி வெளியாகி யிருக்கும் புத்தகங்களைப் படியுங்கள். பத்திரிகைகளைப் பாருங்கள். விளக்கம் கேட்டு கழக நிலையத்துக்கு கடிதம் எழுதுங்கள். நாங்கள் தரும் விளக்கத்தை படித்துப் பாருங்கள். சந்தேகம் நீங்கி எங்கள் இலட்சியத்தில் பற்று ஏற்பட்டால், எங்கள் சக்தியை நம்பினால் கழகத்தில் சேருங்கள்.

'வீழ்ந்த இனத்தை வெற்றிப் பாதையில் வைக்க, நமது வாழ்நாளைப் பயன் படுத்துவோம்' என்று உறுதி கொள்ளுங்கள். உறுதி - என்றும், வீண் போகாது. வெற்றி பெறுவோம்! விசையொடிந்த தாயகத்தை விரைவில் மீட்போம்!!